Koviloor Digital Library

திருநெல்லை

ஆன்மீகத் திங்களிதழ்

விசுவாவசு - ஆவணி - 2025 - செப்டம்பர் | இணைய வழி - மலர் -3- இதழ் - 1

அருள்மிகு சிவகாமி அம்பாள்

தென் சபாநாயகர் கோவில் கோவிலூர்

Koviloor Digital Library

திருநெல்லை

இணைய வழி ஆன்மீகத் திங்களிதழ்

விசுவாவசு – ஆவணி

2025– செப்டம்பர்

இணையவழி மலர் 3 – இதழ் 1

(தனிச் சுற்றுக்கு மட்டும்)

சிறப்பாசிரியர்

பொற்கிழிக் கவிஞர்

சொ.சொ.மீ. சுந்தரம்

ஆலோசகர்

தமிழாகரர் தெ. முருகசாமி

ஆசிரியர் குழு

வெளியிடுபவர்

சீர் வளர் சீர்

நாராயண ஞான தேசிக சுவாமிகள்

கோவிலூர் மடாலயம்

கோவிலூர் 630 307

மானகிரி (அஞ்சல்)

(வழி) காரைக்குடி

சிவகங்கை மாவட்டம்

04565-236846

WhatsApp 94433 37011

இணைய அச்சாக்கம்

தீபா ராஜேஸ்வரி

கோவிலூர்

பொருளடக்கம்

பக்கம்

1. ஆசிரியுரை... 3
2. கோவிலூர் மரபு வேதாந்த நூல்கள் அறிமுகம்... 8
3. சமய எழுச்சியால் சமூக மறுமலர்ச்சி காட்டிய அப்பர்.................................... 11
4. அன்புடைத் தோன்றல் நில்லு கண்ணப்ப!.. 21
5. திருவிளையாடற் புராணம் தொடர்.......... 26
6. தினசரி வாழ்க்கைக்குத் திருப்புகழ்........... 32
7. கோவிலூர் ஆதீன வெளியீடுகள் கோவிலூர் . புதையல்கள்.................................... 37
8. காரைக்காலம்மையாரின் அற்புதத் திருவந்தாதி பாடல் நலம்....................... 42
9. கிருஷ்ணர்கொடுத்தகுருதட்சணை........... 46
10. சிவாலயங்களின் சிறப்புகள்..................... 50
11. திவ்ய தேச கவிதை தரிசனம்................. 54
12. பெரியபுராண கதை களம்....................... 61
13. தென்சபாநாயகர் கோவில் தரிசனம்........ 62
14. ஒலிப்பேழை... 63
15. பயிற்சிப்பேழை.................................... 64
16. கோவிலூர் ஆண்டவர் நூலகம்............... 65
17. முந்தைய இதழ்கள்................................. 67

Koviloor Digital Library

ஆசியுரை

சீர் வளர் சீர்

நாராயண ஞான தேசிக சுவாமிகள்

கோவிலூர் ஆதினகர்த்தர்

நகரத்தார் பண்பாட்டில் படைப்பு

நகரத்தார் மரபில் படைப்பு என்பது முன்னோர்களை நினைவுக்கூறும், முக்கியமான சடங்காக கருதப்படுகிறது, பல தலைமுறைகளின் முன்னோர்களை நினைவுக்கூறும் இந்த நிகழ்வு வெறும் சடங்கல்ல. அது நன்றி உணர்வின் வெளிப்பாடும் அற வாழ்வின் தொடர்ச்சியும் ஆகும். பித்ருலோகம் மறு பிறவி போன்ற தத்துவங்களை ஏற்றாலும்,மறுத்தாலும் படைப்பின் உள்ளார்ந்த நோக்கம் ஒன்றே. முன்னோர் செய்த தியாகங்களை ஆண்டுதோறும் நினைத்துப் பார்ப்பதே படைப்பாகும்.

தமிழ் பண்பாட்டில் முன்னோர்களை நினைவுகூறும் ஒரு மரபு சங்க இலக்கிய காலத்திலிருந்தே காணப்படுகிறது. அந்த காலத்தில் இது நன்றி செலுத்தும் வழக்கமாக இருந்துள்ளது. பின்னர் பிராமண தாக்கத்தால் திதி என்ற வடிவத்தை எடுத்தது. என்றாலும் நகரத்தார் சமுதாயம் படைப்பு மரபினைப் பின்பற்றி வந்தது. திதியையும் ஏற்றது. நகரத்தார்களுக்கு உரிய தனித்த மரபாக இன்னமும் படைப்பு மரபு தொடர்கிறது. . இது நகரத்தார் சமூக ஒற்றுமைக்கும், அறப்பரம்பரைக்கும் அடையாளமாக திகழ்ந்து வருகிறது.

நவீன உளவியல் பார்வையில், படைப்பு என்பது மனித நலத்திற்கு மிகுந்த பல நலனளிக்கும் நேர்மறை மன ஆற்றல் கொண்டதாக விளங்குகிறது. ராபர்ட் எமான்ஸ் போன்ற அறிஞர்களின் ஆய்வுகள் நன்றி உணர்ச்சி என்பது மன

Koviloor Digital Library

அழுத்தத்தை குறைக்கிறது, மன நிறைவை அதிகரிக்கிறது, என்பதைக் காட்டுகின்றன. நன்றி உணர்வு, சமூக ஒற்றுமையையும் உறவுகளையும் வலுப்படுத்துகிறது. நரம்பியல் ஆய்வுகளும், நன்றி உணர்வு மூளையின் reward pathways-ஐ தூண்டுகிறது என்றும் அது நம்பிக்கையையும் ஊக்கத்தையும் வளர்க்கிறது என்றும் தெரிவிக்கின்றன

அறம் சார்ந்த சத்திய நிகழ்வு படைப்பு

ஒவ்வொரு படைப்பும் முன்னோர்களை நினைவு கூறும் நிகழ்வாக மட்டும் அல்லாமல், அறம் சார்ந்த சத்தியமாகவும் அமைய வேண்டும். குடும்ப முழுவதும் ஒன்று இணைந்து பின்வரும் சத்தியத்தை எடுத்துக் கொள்ளலாம்,

“நாம் நம் முன்னோர்களை நன்றியுடன் நினைவு கூறுகிறோம். அவர்கள் காட்டிய அறவழியை நாமும் பின்பற்றுவோம். அவர்கள் செய்த தானத்தையும் சேவையையும் நாங்களும் தொடர்வோம்.எப்படி நாம் பெற்றோமோ அதைப் போலவே நாமும் தருவோம். நம் பிள்ளைகளும் ஒருநாள் நம்மைப் பெருமையோடு நினைவு கூறுவார்களாக. “

என்ற சத்தியத்தை, ஒவ்வொரு படைப்பிலும் எடுத்துக்கொண்டால், நம் அடுத்த தலைமுறைக்கும் படைப்பின் முக்கியம் தெரியும். நம் இளைய தலைமுறைக்கு இது வெறும் சடங்கல்ல, நம் எதிர்கால வாழ்வை வளமாக்கும் நிகழ்வு என்பதை அறியவைக்கும்.

அடைக்கம்மை அப்பத்தா படைப்பு

இதைத் தவிர, பெண்களுக்கான படைப்பு என்பது விசித்திரமானது. அண்மையிலே துவாரில் அடைக்கம்மை அப்பத்தா படைப்பு நிகழ்வில் கலந்து கொண்டு பேசும் வாய்ப்பு கிட்டியது. அடைக்கம்மை அப்பத்தா வரலாற்றைப் பற்றி அறிய ஆவல் கொண்டு அது குறித்த தகவல்களைத் திரட்டினோம். அடைக்கம்மை அப்பத்தா அகால

Koviloor Digital Library

மரணம் அடைந்தார்கள், கணவன் பொறுப்பில்லாதவர், அண்ணிகள் அவரை வெறுத்தார்கள் என்ற காரணத்திற்காக தற்கொலை செய்து கொள்கிறார். அதன் பின்னர் அந்த ஊரில் பல பிரச்சனைகள் ஏற்பட்டு, அடைக்கம்மை அப்பத்தாவுக்குப் படைத்தால் பிரச்சனைகள் தீரும் என அறிந்து அவர்களுக்குப் படைப்பதாக அறிந்தோம்

"படைப்புகள் பலவிதம்" என்ற நூலில், அகால மரணம் அடைந்த பெண்களுக்கு மட்டுமே, படைப்பு இருப்பதாகவும், ஆண்களைப் பொறுத்தவரையில் படைப்பு என்பது நன்றி அறிவிக்கும் விதமாகவும் இருப்பதாக அறிகிறோம் . இனிமேல் வரும் காலங்களில், அடைக்கம்மை அப்பத்தா போன்று பெண்கள் அகாலமரணம் அடையக்கூடாது என்பது நமக்கு புரிகிறது, ஆகவே இனிமேல், புதிதாக பெண்களுக்கு படைப்பு என்ற நிலை வரக்கூடாது என்ற உறுதியையும் நாம் எடுத்துக்கொள்ள வேண்டும்.

நாச்சியப்ப சுவைமிகள் குருபூசை

29/09/2025 அன்று நாச்சியப்ப சுவாமிகள் குருபூசை சிறப்பாக நடைபெற்றது. அவர்கள் துவக்கிய பல திட்டங்கள் நல்ல விதமாக நடைபெற்று வருவது மிகவும் மன நிறைவைத் தருகிறது.

மணமுறிவைத் தவிர்க்க வழிமுறைகள்

அண்மையில் இளையாத்தங்குடி கோவில் ஒக்கூர் பிரிவினர், ஒரு பல்நோக்கு கட்டிடம் கட்டி அதன் துவக்க விழாவிற்கு நம்மை அழைத்திருந்தார்கள், அப்போது நாம் வலியுறுத்திக் கூறிய இரண்டு கருத்துகளை இங்கு பதிவிட விரும்புகிறோம்.

ஒன்று, நம் திருமணங்களில்,

Koviloor Digital Library

இசைகுடிமானத்தில் மணமகனின் தந்தையும் மணமகளின் தந்தையும் கையொப்பம் இடுகிறார்கள். தற்கால தேவைக்கு ஏற்ப, மணமகனும் மணமகளும் குறைந்த பட்சம் ஐந்து ஆண்டுகளுக்காவது பிரியாமல் இருக்க வேண்டும் என்ற உறுதிமொழியை உட்படுத்தி இந்த இசைகுடிமானம் அமையவேண்டும். இதன்வழி நாம் ஒரு உறுதிமொழி எடுத்துக்கொண்டால் அதில் நிற்க வேண்டும் என்ற எண்ணம் மனதில் ஏற்படும்.

பெரும்பாலான மணமுறிவுகள் திருமணமான 4 முதல் 6 மாதங்களிலேயே ஏற்படுகின்றன. இது ஒரு நல்ல எதிர்காலத்திற்கான அறிகுறியல்ல. பெற்றோராக நாம் செய்ய வேண்டிய கடமையிலிருந்து நாம் தவறி விட்டோமோ என்ற ஐயம் நமக்கு எழுகிறது. நாம் நமது பிள்ளைகளுக்கு சகிப்புத்தன்மையைக் கற்றுக்கொடுக்கவில்லை. நம் பிள்ளைகள் நமது கலாச்சாரத்திலிருந்து தவறுவதற்கான வாய்ப்புகள் இப்போது அதிகம் இருப்பதாக நாம் எண்ணுகிறோம். நம் கலாசாரம் கல் போன்று உறுதியானதாக இருந்துள்ளது . வேறு எந்த கலாசாரத்தையும் உள்ளே எடுத்துக்கொள்ளும் நிலை அதற்கு வரவில்லை ஆனால் இப்போது பஞ்சு போல மாறிவிட்டது. வெளியில் இருந்து வருகின்ற எல்லாவற்றையும் நாம் உள்வாங்கிக்கொள்கின்ற நிலைமையில் இருக்கின்றோம், ஆகவே நம் பிள்ளைகள் அவர்கள் படிக்கின்ற கல்லூரி, பள்ளி, அவர்கள் பழகுகின்ற சுற்றுப்புற சூழ் நிலையில் உள்ள நன்மைகளையும் தீமைகளையும் உள்வாங்கிக்கொள்ளுகின்ற நிலமை வந்து விட்ட காரணத்தினால், அவர்களுக்கு Peer Pressure அதிகமாக இருக்கிறது.ஆகவே சகிப்பு தன்மை குறைந்து கொண்டே போகிறது, இனி வரும் காலங்களில், சகிப்புத்தன்மையை நாம் வளர்த்தால் அன்றி நம் திருமணங்கள்

Koviloor Digital Library

நெடுநாட்களுக்கு நிலைத்திருக்காத நிலைமை வந்துவிடும்.

ஒற்றுமை வேண்டும் தேர்தல் வேண்டாம்

நம் சங்கங்களிலே தேர்தல் முறை இருக்ககூடாது என்பதை நாம் பல காலமாக வலியுறுத்தி வருகிறோம்.பல சங்கங்களில் இப்போது தேர்தல் முறை இல்லை என்று அறிகிறோம். அது மிகவும் மன நிறைவை தருகிறது, குறிப்பாக இளையத்தங்குடி கோவில் ஒக்கூர் பிரிவில் தேர்தல் இல்லை.

இப்போது உடனடியாக இரண்டு நிறுவனங்களுக்கு புதிய நிருவாகிகள் தேர்ந்தடுக்கப்பட வேண்டிய காலம். ஒன்று மதுரை நகரத்தார் சங்கம், மற்றொன்று காசிச்சத்திரம் இந்த இரண்டுமே இப்போது தேர்தலை சந்திக்காமல் திருவுள சீட்டின் மூலமாக நிருவாகிகளைத் தேர்ந்து எடுக்க வேண்டும் என்று மீண்டும் வலியுறுத்துகிறோம்.

மணமுறிவைத் தடுப்போம். தேர்தலை தவிர்ப்போம். படைப்பு வழியாக முன்னோர்க்கு நன்றி பாராட்டுவோம்.

அனைவருக்கும் நவராத்திரி, தீபாவளி நல்வாழ்த்துகள்.

நாலடியார் பாடல்கள்

துறவறவியல்

பாடல் 01

அறுசுவை யுண்டி அமர்ந்தில்லாள் ஊட்ட
மறுசிகை நீக்கியுண் டாரும் வறிஞராய்ச்
சென்றிரப்பர் ஓரிடத்துக் கூழ்எனின், செல்வம் ஒன்று
உண்டாக வைக்கற்பாற் றன்று.

விளக்கம்:

ஆறு வகைச் சுவை உணவை அன்புடன் மனைவி உண்பிக்க, ஒரு கவளமே கொண்டு, மற்றவற்றை நீக்கியுண்ட செல்வர்களும் வறியராகி, வேறோர் இடம் போய், எளிய கூழ் உணவை இரந்து உண்பர். ஆதலால் செல்வம் நிலையானது என்று கருதத்தக்கதன்று.

Koviloor Digital Library

கோவிலூர் மரபு வேதாந்த நூல்கள் அறிமுகம் – 5

குமார தேவர் இயற்றிய மகாராஜா துறவு

பகுதி - 2

- முனைவர் மு.பழனியப்பன்
தமிழ்த்துறைத் தலைவர்,
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
திருவாடானை

மகாராஜா துறவு என்னும் நூல் துறவறத்தின் நன்மை, மேன்மைகள் எடுத்துரைக்கும் நூலாகும். மிகப்பெரிய அரச பதவியில் இருந்த மகாராஜா ஒருவர் தன் செல்வம், படைபலம், அதிகாரம் எல்லாவற்றையும் துறந்து தக்க குருவின் துணையுடன் பந்தம் பாசம் அறுத்து துன்பம் துறந்து எப்போதும் இன்பம் நல்கும் மெய்வாழ்வினை அறிந்து உணர்ந்து அதில் நிறைவுகாணும் நிலை உரைப்பதாக இந்நூல் அமைந்துள்ளது.

மகாராஜா துறவு ஏற்று, உலகம் எல்லாம் பரிபூரணமாக நிறைந்திருப்பது பிரம்ம சொரூபம் என்று உணர்ந்தார். இந்த உலகம் தன்னில் இருந்து வேறுபட்டது என்று நினைத்தால் அது பந்தம். உலகம் வேறு தான் வேறு அல்ல என்று உணர்வதே முத்தி. அந்நிலையை மகாராஜா அடைந்து சீவன் முத்தராய் வாழ்ந்து வந்தார். உலகில் பிறந்து ஆசைகளை வளர்த்து பந்தம் பெற்று பழகிவிட்டால் அந்த பந்தத்தை எப்படி விட இயலும். மகாராஜா இரஜோ, தமோ குணங்கள் நீங்கி

Koviloor Digital Library

சத்துவ குணம் கொண்டு ஆனந்த வடிவில் நின்றார்.

மகாராஜா இத்தகைய மெய்ந்நிலை அடைந்ததை அறிந்த அமைச்சன் ஒருவன் மகாராஜாவின் நிலை பற்றி அறிய எண்ணம் கொண்டான். அமைச்சன் மகாராஜாவை சந்தித்து மகாராஜாவின் ஆன்ம அனுபவம் பற்றி அறிந்து கொள்ள வினாக்கள் தொடுத்தான்.

இல்லற வாழ்வினைச் சிறப்புடன் வாழ்ந்து, அதன்பின் முத்தியை உணர்ந்து, ஆத்ம தரிசனம் பெறுவதே சிறப்பு என்பதுதானே முறைமை. இதற்கு எதற்காக பரதேசிக் கோலம், இதற்கு எதற்காக துறவு என்று ஒரு கேள்வியை அமைச்சன் மகாராஜாவினிடம் முன்வைக்கிறான். இதற்குப் பதில் அளிப்பதாக இந்நூலின் பின்பகுதி முழுவதும் அமைகின்றது.

குடும்பம் என்னும் பாசச்சுமை ஒருவனைப் பற்றிக் கொண்டால் அதில் இருந்து வெளிவருவது கடினம். குடும்பச் சுமையில் மூழ்கிக் கிடப்பவனுக்கு ஞானப் பார்வை எப்படித் தோன்ற முடியும் என்று மகாராஜா பதில் கூறத் தொடங்கினார்.

ஐந்து புலன்களின் வழியாக மனித வாழ்க்கை அமைகின்றது. மனமானது ஒரு நேரத்தில் ஒரு புலன் வழியாக மட்டுமே இயங்கும். மனம் ஐந்து புலன்களின் வழியாகவும் ஒரே நேரத்தில் இயங்காது. பல அவதானங்களைச் செய்வோரும் விரைவில் அதனைச் செய்வார்களே தவிர மனம் ஒன்றை மட்டுமே செய்யும் இயல்பினது. அந்த மனத்தை இல்லறத்தில் மட்டுமே வைக்க இயலும் அல்லது துறவறத்தில் மட்டுமே வைக்க இயலும்.

வடதிசை நோக்கிச் சென்றால் மட்டுமே கங்கையில் தீர்த்தமாட இயலும். தென்திசை நோக்கிச் சென்றால் கங்கையில் குளிக்க இயலாது. வீடுபேறு அடைய உள்நோக்கமாகிய ஞான நெறி வேண்டும். வெளி நோக்கமாகிய இல்லறத்தில் இருந்தால் வீடுபேறு கிடைக்காது.

உலகப் பொருள்கள் அனைத்தும் மாயை வயப்பட்டது. பிரம்மம் ஒன்றே தூய்மையானது. உலகப்பொருள்கள் அனைத்தும் நிலையற்றவை. தூய்மை அற்றவை. துக்கம் தருபவை. இவற்றைத்


சற்குருப்யோ நமஃ.
ஸ்ரீ குமாரதேவ சுவாமிகள்
அருளிச்செய்த
மஹாராஜா துறவு மூலம்.
இது
சமீவன க்ஷேத்திரமென்னும்
ஸ்ரீ கோயிலூர்
முத்திராமலிங்க ஞானதேசிகர்
ஆதீனத்திற்குரிய
திருக்களாண்டவரென்னும்
ஸ்ரீலஸ்ரீ வீரசேகர ஞானதேசிகர்
பாதசேகரரான
காசிவாசி
ஸ்ரீ காசிகாநந்த சுவாமிகளால்
அச்சியற்றப் பெற்றது.

நூலின் இணைய இணைப்பு

தோன்றச் செய்யும் பிரம்மம் நிலையானது.

மனிதர்கள் கரு பருவம் , பாலப் பருவம், குமரப் பருவம், வாலிபப் பருவம், கிழப்பருவம் போன்ற பல பருவங்களைத் தன்வாழ்வில் கடக்கிறார்கள். ஒவ்வொரு பருவத்திலும் பல இடையூறுகள். ஒவ்வொரு பருவத்திலும் அழிவு நேரலாம். இத்தகைய நிலையற்ற வாழ்க்கை மனிதர்களின் வாழ்க்கை.

இதுபோன்று உலகப் பொருள்களான பஞ்ச பூதங்கள், சூரியன், நிலவு, தேவர்,நரகர், இந்திர பதவி, நான்முகப் பதவி அனைத்தும் நிலையற்றவை. முக்திப் பதவி ஒன்றே அழியாதது. அதனைப் பெற துறவு நெறியே சிறப்பு.

ஒருவனுக்குப் புண்ணிய வசத்தால் பெரும்பொருள் கிடைக்கலாம். ஆனால் அப்பொருளால் இன்பம் விளையாது. துன்பமே விளையும். கள்வர் கவரலாம். உறவினர் கேட்கலாம். அரசர்கள் பறிக்கலாம். எனவே பொருள் செல்வம் மிகுதி வருத்தத்தையே தரும். நோய், சாவு, அடுத்த பிறவி பயம் போன்றனவும் மனித வாழ்விற்குப் பெருந்துன்பம் தருவன.

இவற்றை அறிந்து ஞானவாழ்வினை அடைக என்று மகாராஜா விடையளிக்கிறார். அவர் சமாதி நிலையில் தன்னை அமைத்துக் கொள்கிறார்.

இவ்வாறு மகாராஜா துறவு தலைப்பிற்கு ஏற்ற வகையில் துறவின் மேன்மையை விளக்குகின்றது.

அப்பர்

பகுதி – 17

அப்பர் அமைத்த இலக்கியப் பாலம் பழமொழிகளில் பத்திமை

திருமதி மு. சுப்புலட்சுமி,
வரலாற்றாய்வர்
ஆசிரியர்: www.glorioustamils.com, www.attraithingal.com,
வலையொலி/ podcast
அற்றைத்திங்கள்...
வலையொலியில் தமிழொலி

“தமிழ்நாட்டின் தலையெழுத்தையே மாற்றியெழுதிய பெருமையை வரலாறு மிகச் சிலருக்கே வழங்கி மகிழ்கிறது. சமயத்துறையில் அத்தகு பெருமையைப் பெற்றவர்களுள் தேவாரம் பாடிய அப்பரும் சம்பந்தரும் சிறப்பானவர்கள். இவ்விருவருள் தம் பண்பு நலன்களால், பங்களிப்பால், பதிகச் சிறப்பால் பெருமையின் உச்சியில் பெருமிதத்தோடு வீற்றிருப்பவர் அப்பர் பெருமான். தேவார மூவரில் அப்பருக்குத் தனியிடம் உண்டு. அவர் பல முதல்களுக்கு உரிமையாளர்”

‘அப்பர் எனும் அரிய மனிதர்’ என்ற கட்டுரைத் தொடரில் கட்டுரை ஆசிரியர், டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையத்தின் இயக்குநர் டாக்டர் இரா. கலைக்கோவனின் இவ்வரிகள், அப்பர் குறித்த

Koviloor Digital Library

கட்டுரைகளுக்கான ஊக்கியாக அமைந்தவை. அவர் குறிப்பிட்ட பண்பு நலன்களும் பங்களிப்பும் ஓரளவே இதுகாறும் ஆயப்பட்டன. இன்னும் நிறைந்துள்ள அளப்பரிய தகவல்கள் எண்ணிலடங்கா.

இறையன்பு, தத்துவம், இறைவன் பெருமை இவற்றை நீக்கினால் பத்திமை இலக்கியத்தில் வேறேதும் மிஞ்சுமா? இந்தக் கேள்விக்கான விடைதான் அப்பர் தம் பாடல்களில் பொதிந்து வைத்த அன்பு, அறம், அறிவு, சிந்தைத் தெளிவு, சமூகச் சீர்திருத்தம், பகுத்தறிவு, வரலாறு என்று நீளும் பட்டியல். இதனினும் கூடுதலாக ஏதேனுமுண்டா? உண்டென்பதே அப்பர் பாடல்கள் தரும் விடை. நான்கடிப் பாடல் ஒவ்வொன்றிலும் அவர் பின்னிப் பிணைத்துக் கொடுத்தவை, படிப்போருக்கும் ஆய்வோருக்கும் ஆழ்கடலில் தேடிக் கிட்டும் முத்துக்கள்.

மூன்றாவதாகக் குறிப்பிடப்பட்ட பதிகச் சிறப்பை நோக்கின்

1. திருவையாற்றுப் பதிகத்தில் (04.003), காதல் மடப்பிடியோடு களிறு தொடங்கி இணைகளை வரிசைப்படுத்திய பின், தொண்டர்கள் பணிகளைப் பட்டியலிட்டார்

2. ஐந்தாம் திருமுறையின் பொதுப் பதிகத்தில் (05.095), வழிபாட்டு முறைகளை வரிசைப்படுத்தினார்

3. திருவாரூர்ப் பதிகத்தில் (06.031), இறைவனைப் போற்றித் துதிக்கும் முறைகளைப் பகர்ந்தார்

4. திருக்கன்றாப்பூர்ப் பதிகத்தில்

Koviloor Digital Library

(06.061), இறைவனைக் காணத் தேவையான அன்புநிறை இயல்புகளை எளிமைப்படுத்தி அடுக்கினார்

5. திருவங்கமாலையில், உடலுறுப்புகளால் இறைவனை வணங்கும் வழியை அவ்வுறுப்புகளுக்கான கட்டளையாகத் தந்தார்.

இது ஒரு சுருக்க விளக்கமே.

"சைவ, வைணவ பக்தி இலக்கியங்களில் பழமொழிகளை, மரபுச் சொற்றொடர்களை அப்பர் பயன்படுத்தியிருப்பதுபோல் வேறெந்தத் திருத்தொண்டரும் நாயன்மார்களோ, ஆழ்வார்களோ பயன்படுத்தவில்லை. இம்முதுமொழிகள் தனி ஆய்வுக்குரியன," என்று டாக்டர் இரா. கலைக்கோவன் அழுந்தச் சுட்டியதை இனி வரும் சில பதிவுகளில் விரிக்க முயல்வோம்.

தமிழரும் பழமொழியும்

திருநாவுக்கரசர் எனும் பத்திமையாளர் தமக்கு முந்தைய தமிழ்ச்சமூகத்தில் வழக்கிலிருந்த பழமொழிகளைப் பயன்படுத்திய போக்கு, படிப்போரைப் பெரிதும் வியப்புக்குள்ளாக்கும்.

கழிவழி யோத முலவு கடனாகைக் காரோணவென்

வழிவழி யாளாகும் வண்ண மருளெங்கள் வானவனே

(04.103.04)

என்று, வழிவழியாகச் சிவபிரானுக்குத் தொண்டராகவும் அடியவராகவும் நிலைத்து நிற்கும் அருளைக் கடல்நாகைக் காரோணத்து இறைவனிடம் வேண்டினார் அப்பர் பெருமான். 'வழிவழி' என்ற அடுக்குத்தொடர், தொன்மங்களின் தொடர்ச்சியைக் குறிக்கும் ஓர் அடையாளக் குறி. தமிழர் வாழ்வியலோடு ஒன்றிய பல்வேறு விழுமியங்கள் தம் சமகாலச் சமூகத்தில் இணைந்தே வலம்வர,

Koviloor Digital Library

தம் பதிகங்களைப் பண்பாட்டுக் கடத்திகளாக அமைத்துத் தந்தவர் அல்லவா நாவுக்கரசர்? அப்படிப்பட்ட தொன்மங்களுள் பழமொழிகளையும் கையாளத் தவறவில்லை அவர். அக்கையாளல், சுவையானதென்று கூறி நிறுத்தின் குற்றமாகும். அவை, படிக்கப் படிக்கப் புதிய பொருள்தரும் உணர்வுக் களஞ் சியங்கள்; அறிவுப் பெட்டகங்கள்.

அறத்தைக் கண்ணாக மட்டுமின்றி உயிர்மூச்செனவும் தமிழினம் போற்றியதைப் பறைசாற்றும் இலக்கியங்கள் போலவே, தெளிவாக வலியுறுத்துபவை முதுமொழிகள் அல்லது பழமொழிகள். தமிழின் முதல் இலக்கண நூலான தொல்காப்பியம் பழமொழியை

நுண்மையும் சுருக்கமும் ஒளியுடைமையும்

எண்மையும் என்றிவை விளங்கத் தோன்றின்

குறித்த பொருளை முடித்தற்கு வரூஉம்

ஏது நுதலிய முதுமொழி என்ப

(செய்யுளியல் 170)

என்கிறது. முன்னோர் வழங்கிய அறிவுரைகளாம் முதுமொழிகள் நுட்பம், சுருக்கம், தெளிவு மற்றும் எளிமையால் அறம் வளர்த்த பாங்கினையே இது தெளிவுபெறக் குறிக்கிறது.

மூத்த தமிழ்க்குடி பயின்ற வாய்மொழி இலக்கியத்தின் பின்னாளைய எழுத்து வடிவமே இவை. தமக்கு முன்வந்த இலக்கியங்களுக்குத் தொல்காப்பியர் இலக்கணம் வகுக்க, சங்கப் புலவர்கள் மேலும் விரித்துரைத்தனர் முதுமொழிகளை.

அகநானூற்றில் அம்மூவனார்

அம்ம வாழி தோழி! 'இம்மை

நன்று செய் மருங்கில் தீது இல்' என்னும்

தொன்றுபடு பழமொழி இன்று பொய்த்தன்று கொல்? (அகம் 101)

என்று தொன்றுதொட்டு வழக்கத்திலிருந்த பழமொழியைச் சுட்டினார். "அச்சமூட்டும் காட்டையும் மலையையும் கடந்து, பொருளீட்டச் சென்ற காதலரின் பிரிவால் இன்று வாடுகிறோமே.. நாம் அப்படியென்ன தீப்பண்புகள் முன்பு கொண்டோம்?," என்று வினவும் தலைவியின் வாக்கால் நம்பிக்கை சார்ந்த தொன்றுபடு பழமொழிகள் சங்ககாலத்தும் பற்பல ஆண்டுகளுக்கு முன்பும் தமிழரின் அன்றாட வாழ்வோடு பிணைந்திருந்ததைத் தெரிந்து

Koviloor Digital Library

நிலையாமை குறித்தவற்றை உணர்த்தும் நூல். நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி என்றதில் நாலைக் குறிக்கும் நாலடியார் பற்பலப் பழமொழிகளை வழங்கும் மற்றுமொரு கீழ்க்கணக்கு நூல்.

இவ்வகையில் தமிழர் தொன்றுதொட்டு புழங்கிய வழிவழி வழக்குகள், நாட்டார் பழகியதால் செவிவழிச் சொலவடைகளாகவும், இலக்கிய ஆசிரியர்கள் திறம்படக் கையாண்டதால் தமிழ் வாசிப்போரிடையே பழமொழிகளாகவும் கொள்ளலாம்.

பழமொழியென்றும் முதுமொழியென்றும் பழந்தமிழ் இலக்கியங்கள் குறித்த முன்னோர் வழக்கிலிருந்த மரபுச் சொற்றொடர்களைப் பலவாறாகப் படைப்பாளர்கள் கையாண்டனர். அவற்றுள் நானூறை முன்றுரை அறையனார் தொகுத்து இயற்றினார். அதுவே, பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றான ‘பழமொழி நானூறு’. அதே இலக்கியப் பிரிவைச் சேர்ந்த முதுமொழிக் காஞ்சி, மூத்தோர் வழங்கிய அறவுரைகளில் குறிப்பாக இன்றுவரையில் உலவி வருகின்றன. தொல்காப்பியர் உரைத்த நுட்பம், சுருக்கம், தெளிவு மற்றும் எளிமை கொண்டு பல நூற்றாண்டுகள் கழித்தும் அறம் வளர்த்த பிற்கால ஔவையின் மூதுரை, இன்றும் சிறார்கள் படிக்கும் பாடமாகக் கொள்ளப்படுகிறது.

அப்பர் அருளிய பழமொழிப் பதிகமும் உவமைகளும் : திருவாரூர் பதிகம் (4.005)

நாவுக்கரசர், நான்காம் திருமுறையின் திருவாரூர்ப் பதிகத்தைப் பழமொழிப் பதிகமாக வழங்கினார். இணைந்த

Koviloor Digital Library

உவமைகளோடு கூடிய பாடல்களில் நெகிழ்வும் தன்னை நொந்தலும் புலம்பலும் ஒருபுறமிருக்க, நுணுகி நோக்கின் அவருடைய சங்கம் பயின்ற இலக்கிய அறிவும், தொடர்ந்த சங்கம் மருவிய காலத்து அறநூல் பயிற்சியும் புலப்படும். ஓர் இலக்கிய ஆசானாக அப்பரைப் பேருருவில் முன்னிறுத்தும் இப்பதிகத்துள் மேலும் தனித்தொளிர்வது அப்பர் பயிற்றுவித்த வழிவழித் தொடர்ச்சியே.

பதிகத்துள் அப்பர் தொகுத்தருளிய பல்வேறு கருத்துகளின் பட்டியல்

1. வேற்றுச் சமயத்தில் சேர்ந்து தாமிழைத்த தவறுகள் அதற்காக மனம் வருந்திப் புலம்பல்

2. மெய்யெலாம் வெண்ணீறு பூசிய சிவபெருமானின் தோற்றப் பொலிவு

3. சிவனார் அன்பு பாராட்டி அப்பரை ஏற்றருளிய தன்மை அதற்காக நெகிழ்தல்

4. திருவாரூர் ஊரழகு

5. இறைவனுடைய வீரச் செயல்கள் முப்புரம் எரித்தவர்; காமனைக் கண்ணாலும் காலனைக் காலாலும் அழித்தவர்; இராவணனின் தலையும் தோளும் தாளும் அழுத்தியவர்; பிரமன் தலையொன்றை அறுத்தவர்; விடமுண்டு கண்டம் கறுத்தவர்

6. சிவனைச் சாராத தம்முடைய தவறுக்கான விளக்கம் பழமொழிகளும் அவற்றுடன்கூடிய உவமையும்.

பாடல் ஒன்று

மெய்யெலாம் வெண்ணீறு சண்ணித்த மேனியான் தாள்தொ ழாதே

உய்யலா மென்றெண்ணி யுறிதூக்கி யுழிதந்தென் னுள்ளம் விட்டுக்

கொய்யுலா மலர்ச்சோலைக் குயில்கூவ மயிலாலு மாரூ ரரைக்

கையினாற் றொழா தொழிந்து கனியிருக்கக் காய்கவர்ந்த கள்வ னேனே

(04.005.01)

மெய்யெலாம் வெண்ணீறணிந்த இறைவனின் தாள்தொழாமல் வாழ்வில் உய்யலாமென்றெண்ணி, வேற்றுச் சமயத்தில் மனதைப் பறிகொடுத்து உறிதூக்கி அதில் கலந்திருந்த தன் நிலையை எண்ணிப் புலம்பினார் அப்பர்.

திருவாரூர் நகரின் எழிலெப்படி?

‘கொய்யுலா மலர்ச்சோலைக் குயில்கூவ மயிலாலு மாரூரர்’

Koviloor Digital Library

அடியார் மலர்க் கொய்வதற்கு வசதியான சோலைகள் நிறைந்த ஆரூரில் குயில்கள் கூவின மயில்கள் ஆடின. அத்தகு எழிலுடைய ஆரூர் இறைவனைக் 'கையினாற் றொழா தொழிந்து கனி யிருக்கக் காய்கவர்ந்த கள்வ னேனே', என்று பழமொழி சொல்லி முடித்தார். தன்னைத் தானே கள்வனென்று சாடி நொந்து கொண்டார்.

"இறைவனைத் தொழும் கனிபோன்ற இனிய நெறி யிருக்க அதைவிடுத்து, ஒவ்வாத பிறசமயத்தை நாடிய கள்வனாகிப் போனேனே," என்று நொந்த உள்ளம் அவருடையது.

இதே மொழியை வள்ளுவர், 'இனிய உளவாக இன்னாத கூறல் கனியிருப்பக் காய்கவர்ந் தற்று' (இனியவை கூறல் 10) என்றுரைத்தது உடனே நினைவுக்கு வரும். வள்ளுவர், இனிய சொற்களான பழமிருக்க இன்னாதவையான காயைத் தேர்வதைத் தவிர்க்கச் சொன்னார்.

அறமுரைத்த சங்கம் மருவிய காலத்து வள்ளுவம், இன்னாச் சொற்களைக் கசப்புக் காயென்றது. அப்பருடைய பத்திமைப் பதிகமோ, சைவநெறிக் கனியிருக்கப் புறச்சமயக் காய்க்கவர்ந்ததை எண்ணியெண்ணி நொந்தது.

இவ்வகையில், சங்ககாலப் புறநானூற்றில் பெருஞ் சித்திரனார்(207) இயற்றிய பாடலொன்று சிந்தையைக் கவர்ந்தது. வள்ளுவரும் அப்பரும், கனியொன்று கையிலிருக்க அதைத் தேர்ந்தெடுக்காமல் காயைத் தேர்ந்தெடுக்கும் தவறைத் தவிர்க்கப் பாடினர். இந்த உணர்வினின்று வேறுபட்டது சங்கப்பாடல்.

தன் புலமைக்கு மதிப்பளித்துப் பரிசில் வழங்காத இளவெளிமான்

Koviloor Digital Library

எனும் அரசன்பால் கோபத்தை வெளிப்படுத்தினார் புலவர். அவர் தன் நெஞ்சிடம் "மிகுந்த வலிமையுடைய யாளிபோல் ஒருவர் உள்ளிருக்கும் ஆற்றலை எவ்வளவு தடுத்தாலும் அடக்கிவைத்திட முடியாது. எனவே நெஞ்சே எழு! உள்ளன்போடு நட்பு பாராட்டாமல் தவிர்க்கும் இந்த மன்னரைவிட்டு இங்கிருந்து செல்வோம்.

பெரிதே உலகம், பேணுநர் பலரே,

....

நோவாதோன் வயின் திரங்கி

வாயா வன் கனிக்கு உலமருவோரே

"இந்த உலகம் மிகப் பெரியது. நம்மைப் பேணும் மன்னர் பலரிருக்க, மற்றவர் நிலை கண்டு அன்பும் மதிப்பும் காட்டாத இவர் முன்பு ஏன் நிற்கவேண்டும்? பழுக்காமல் வதங்கிப்போன கனியின்பின் யார்தான் காத்திருப்பர்?," என்று தன்மானம் பொங்கப் பாடினார்.

சங்ககாலப் புறத்திணைப் பாடல், பாவலரை மதியாத புரவலர் பண்பை முற்றாத கனியென்று காட்டியது. பிறருக்கு உதவ முன்வராத பண்பு இங்கே பழுக்காத கனிக்கு (வாயா வன்கனி) உவமையானது. சங்ககாலந் தொட்டே உவமைக்கெனப் புலவர்கள் கையாண்ட பொருட்களுள் கனியும் காயும் இருந்ததை இது காட்டும்.

பாடல் இரண்டு

இப்பாடல் முழுமையும் இறையருளை நெக்குருகி நினைந்து, அத்தகையோனைச் சாராத தன் நிலையையெண்ணி வருந்தினார் நாவுக்கரசர்.

என்பிருத்தி நரம்புதோல் புகப்பெய்திட் டென்னையோ ருருவ மாக்கி

இன்பிருத்தி முன்பிருந்த வினைதீர்த்திட் டென்னுள்ளங் கோயி லாக்கி

அன்பிருத்தி யடியேனைக் கூழாட்கொண் டருள்செய்த வாரூ ரர்தம்

முன்பிருக்கும் விதியின்றி முயல்விட்டுக் காக்கைப்பின் போன வாறே

(04.005.02)

எலும்பிருத்தி அதில் நரம்பும் தோலும் பொருத்தி உரு கொடுத்தார் இறைவன். தானோ அதில் இன்பங்களையே முதன்மையாகக் கொண்டு தீவினைகளைச் சேர்த்திருந்தது குறித்துக் குற்றவுணர்வில் தவித்தார் அப்பர்.

ஆனால் இறைவன் செய்தது

Koviloor Digital Library

என்ன?

முன்பிருந்த வினை தீர்த்தார்; உள்ளத்தைக் கோ யிலாக்கிக் குடிபுகுந்தார்; அதில் அன்பை இருத்தினார்; அனைத்திற்கும் மேலாக, அன்பரை ஆட்கொள்வதைக் கடமையெனக் கொண்டு அருள்செய்தார் ஆரூர்ப் பெருமான்.

இப்படிப்பட்ட சிவனாரின் முன்னிருக்கும் வாய்ப்பை நழுவவிட்டு அதுவரையில் வாழ்ந்த தன் நிலையை, அருகிருக்கும் முயலை விட்டுவிட்டுப் பிடிக்கவியலாமல் பறக்கும் காக்கைப்பின் போவதற்கு உவமையாக்கினார் அப்பர்.

அப்பரின் இலக்கியப் பயிற்சியை எடுத்துக் காட்டும் மற்றுமொரு பாடலிது. சங்கம் மருவிய காலத்துப் பழமொழி நானூறில் இப்பழமொழி இடம்பெறக் காணலாம்.

அற்றாக நோக்கி அறத்திற்கு அருளுடைமை

முற்ற அறிந்தார் முதலறிந்தார் தெற்ற

முதல்விட் டஃதொழிந்தோர் ஓம்பா ஒழுக்கம்

‘முயல்விட்டுக் காக்கை தினல்’

(பழமொழி நானூறு 370)

அறத்திற்கு அருளுடைமை முதன்மையானது என்பதை உணர்ந்தவரே தெளிவு பெற்றவர். இதை உணராமல் ஓம்பா ஒழுக்கத்தோடு அறம் தவறுபவர்களின் செயல், நிலத்திலிருக்கும் முயலைவிட்டுப் பறக்கும் காக்கையைப் பிடித்துத் தின்ன முயலுவதை ஒக்குமாம்.

அப்பருக்குப் பின்வந்த திருமங்கையாழ்வாரும் தம் சிறிய திருமடலில் இதே பழமொழியைப் பயன்படுத்தினார்.

தேரார் நிறைகதிரோன் மண்டலத்தைக் கீண்டு புக்கு

ஆரா அமுதம் அங்கு எய்தி, அதினின்றும்

வாராது ஒழிவது ஒன்று உண்டே. அது நிற்க,

ஏரார் முயல் விட்டுக் காக்கைப் பின் போவதே”.

(திருமங்கையாழ்வார், சிறிய திருமடல்)

கோயிலில் இறைவனைக் கண்டு இன்புறும் பத்திமை இம்மண்ணிலிருக்க, கதிரவனின் மண்டலத்தைக் கடந்து ஆராவமுதாம் இறைவனை அங்கு கண்டுய்ந்து

Koviloor Digital Library

வாராதொழிவது தேவையற்ற செயலென்றார் திருமங்கையாழ்வார். புலாலுண்பவர் எளிதாகக் கிடைக்கக்கூடிய முயலைவிட்டுப் பறக்கும் காக்கைப் பின்போவது போன்றது நிலத்திருக்கும் இறைவனை இங்கேயே நாடாமல் எட்டா உயரத்தில் தேடிச் செல்வது என்று கூறி, பழமொழிக்கு மேலும் தொடர்ச்சி தந்தார் திருமங்கை மன்னர்.

பழமொழி நாற்பது அறத்தின் இ ன் றி ய மை ம ய ா மை ம மை ய விளக்க முயலையும் காக்கையையும் இணைத்தது; திருமங்கையாழ்வாரோ இருக்கும் இடத்தில் இருந்தபடி திருமாலை வழிபடும் வகை மொழிந்தார். அப்பரென்னும் எளிய அடியார், சிவனைச் சாராத தன்னியல்புக்கே இதனை உவமையாக்கிச் சைவநெறியைச் சமூகம் எளிதில் பற்றும் பாடம் சொன்னார்.

கூடுதலாக, அப்பருடைய இப்பதிகத்தின் இரண்டு பழமொழிகள், பதினோராம் திருமுறையில் தொகுக்கப்பட்ட நக்கீர தேவரின் கோபப் பிரசாதத்தில் மீண்டும் இடம்பெறக் காணலாம். பூக்கமழ்ச் சடையனைப் புண்ணிய நாதனை நினையாமல் மற்று நினைப்போர் மாமுயல் விட்டுக் காக்கைப் பின்போம் கலவர் (வேடர்) போலவும், விளக்கங் கிருக்க மின்மினி கவரும் அளப்பருஞ் சிறப்பில் ஆதர் (அறிவற்றவர்) போலவும் ஆவரென்று அப்பரைப் பின்பற்றினார் இதன் ஆசிரியர்.

இப்படி வழிவழி மொழிகளைத் தொடர்ந்து கோத்துத் தரும் இயல்பு தமிழ் இலக்கிய ஆசான்களின் திறன். இதுவே, பின்வரும் தலைமுறைக்கு இலக்கிய வழிகாட்டும் விளக்கொளியாம்.

சைவ நெறியும் இறையன்பும் பாடிய நாயன்மாருள், தமிழர் பண்பாட்டின் பண்டைய சாயலையும் இலக்கிய நுட்பங்களின் தொடர்ச்சியையும் பத்திமைப் படைப்பிலும் வாரிவாரி வழங்கியவர் நாவுக்கரசர். ஆயிரமாண்டுகள் கடந்து இக்காலத்திலும் தொடரும் தமிழர் வழக்குகள் குறித்த நீண்ட இலக்கியத் தேடலுக்கு வித்திட்டவரும் அவரே.

நன்றி: டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம், திருச்சிராப்பள்ளி.

Koviloor Digital Library

அன்புடைத் தோன்றல் பகுதி–2

நில்லு கண்ணப்ப!

இரா. கலைக்கோவன்,
இயக்குநர்,
டாக்டர் மா. இராசமாணிக்கனார்
வரலாற்றாய்வு மையம்,
திருச்சிராப்பள்ளி

திருக்கண்ணப்பத்தேவர் திருமறம்

கண்ணப்பர் மலைமீதுள்ள குடுமித்தேவரின் முன்னிலையில் உடும்புடன் நிற்கும் மூன்றாம் சிற்பக்காட்சி தனித்தன்மையது. குடுமித்தேவருக்கு உணவூட்டக் கண்ணப்பர் மேற்கொண்ட முயற்சிகளைச் சேக்கிழார் பல பாடல்களில் காட்டியுள்ளார். தாம் கொன்ற பன்றியின் தேர்ந்த இறைச்சியைக் கொணர்கிறார் முதல் நாள். மறுநாளோ பல விலங்குகளைக் கொன்று அவற்றின் சிறந்த பகுதிகளைச் சுட்டுச்சுவைபார்த்துக் கொணர்கிறார். ஆனால், எந்த நாளும் அவர் உடும்பு கொணர்ந்ததாகச் சேக்கிழார் கூறவில்லை. இந்நிலையில்தான் நக்கீரத்தேவரின் திருக்கண்ணப்பத் தேவர் திருமறம் உதவிக்கு வருகிறது. ‘வான்தனி முகட்டில்



Koviloor Digital Library

வந்து அழல் சிந்தக் கடும்பகல் வேட்டையில் காதலித்து அடித்த உடும்பொடு' எனும் திருமற அடிகள் இச்சிற்பக்காட்சிக்குப் பின்புலமாகின்றன.

இச்சிற்பத்தில் கண்ணப்பரின் பின்னால் அவரது வேட்டை நாய் அமர்ந்திருக்கக் காணலாம். கண்ணப்பருடன் காளத்தி மலைக்கு அவரது நாயும் சென்றதாகச் சேக்கிழார் கூறவில்லை. என்றாலும், சிவகோசரியார் காலையில் வந்து திருத்தம் செய்யும் சூழல்நிலைகளுள் ஒன்றாய் நாயடிகளையும் குறிக்கிறார். 'அவ்இறைச்சி எலும்புடன் இலையும் செருப்படியும் நாயடியும் திருஅலகால் மாற்றி' எனும் பாடலடிகள் நோக்கத்தக்கன. இதன் வழி, கண்ணப்பருடன் அவர் நாயும் மலைமீது வந்து சென்றதைச் சேக்கிழார் குறிப்பால் உணர்த்துகிறார். ஆனால், நக்கீரரோ 'கனல் விழி கடுங்குரல் நாய் பின்தொடர' என்ற அடியின் வழிக் கண்ணப்பரை அவரது நாயும் தொடர்ந்ததென்று நேரடியாகவே சுட்டுகிறார். கண்ணப்பர் உடும்பு அடித்துக் கொணர்ந்தபோதும் அந்நாய் அவரைத் தொடர்கிறது. 'உடும்பொடு சிலை கணை உடைத்தோல் செருப்புத் தொடர்ந்த நாயொடு தோன்றினன்' எனும் அடிகள் எண்ணி மகிழத்தக்கன. இப்பாடல் அடிகளுக்கு ஒப்ப, உடும்பு, சிலை, கணை, உடை, நாய் இவற்றுடன் கண்ணப்பரையும் காட்டும் சிற்பத்தில் மிதியடி மட்டுமே இல்லை.

இறைவனால் கண்ணப்பர் தடுத்தாட் கொள்ளப்படும் நிறைவுக் காட்சி காட்டும் சிற்பமும் சேக்கிழாரின் திருத்தொண்டர் புராணப் படப்பிடிப்பிலிருந்து மாறுபட்டுள்ளது. முதற்கண்ணை இடந்து அப்பிய கண்ணப்பர், இரண்டாம் கண்ணை அகழும் முன் அடையாளத்திற்காக இறைவனது திருக்கண்ணில் தம் இடக்காலைப் பதித்துக் கொண்ட பிறகே கண்ணெடுக்கும் முயற்சியில் ஈடுபட்டதாகச் சேக்கிழார் கூறுவார். ஆனால், சிற்பத்தில் கண்ணப்பர்



Koviloor Digital Library

சிவலிங்கத்தின் முன் கருடாசனத்தில் அமர்ந்த நிலையில்தான் இடக்கண்ணை அகழ்கிறார்.

நக்கீரரின் திருமறம் எந்நிலையில் இந்நிகழ்வு நடந்ததெனக் குறிக்கவில்லை. என்றாலும், இறைவன் கண்ணில் வேடர் காலூன்றியதாகக் கூறவில்லை. 'கண்ணிடைக் கணையது மடுத்துக் கையில் வாங்கி அணைதர அப்பினன்; அப்பலும் குருதி நிற்பது ஒத்து உருப்பெறக் கண்டு நெஞ்சுகந்து மற்றைக் கண்ணிலும் வடிக்கணை மடுத்தனன்' எனும் நக்கீர அடிகள் சோழச் சிற்பிகளுக்குச் சொந்தமாகச் செயல்படும் உரிமையை வழங்கிவிட்டன போலும்.

கண்ணகழும் கண்ணப்பரின் அம்பேந்திய கையைத் தடுத்துப் பிடிக்க சிவலிங்கத்திலிருந்து கையொன்று வெளிப்பட்ட அழகும் அவர் செயலை நிறுத்தச் சொல்லி இறைவன் குரல் கொடுத்த பாங்கும் திருத்தொண்டர் புராணத்தைவிடத் திருமறத்து அடிகளில் சிறப்புறக் காட்டப்பட்டுள்ளன. 'நில்லு கண்ணப்ப, நில்லு கண்ணப்ப, என் அன்புடைத் தோன்றல் நில்லு கண்ணப்ப என்ற இன்னுரை அதனொடும் எழிற் சிவலிங்கம் தன்னிடைப் பிறந்த தடமலர்க் கையால் அன்னவன் தன் கை அம்பொடும் அகப்படப் பிடித்து அருளினன்' எனும் பாடலடிகளை அதே உணர்வு பொங்க, இராஜராஜீசுவரத்துச் சிற்பத்தொகுதியில் சோழச்சிற்பிகள் காட்சியாக்கியிருக்கும் உளி நுட்பம் அவர்களை வழிநடத்திய இலக்கியமாகத் திருமறத்தையே அடையாளப்படுத்திப் பொலிகிறது.

கண்ணப்பர் சிற்பப் பதிவுகள்

தமிழ்நாட்டில் காணக் கிடைக்கும் கண்ணப்பர் சிற்பப் பதிவுகளில் காலப் பழைமையானதாகக் கொள்ளத்தக்கத் தக்கோலம் ஜலநாதீசுவரப் படிப்பிடிப்பும் அதைத் தொடர்ந்தமைந்த முற்சோழர், இடைச்சோழர் காலக் கண்ணப்பர் காட்சிகளும் (கழுக்குன்றம், மேல்பாடி, திருவாலீசுவரம், திருந்துதேவன்குடி, தலைஞாயிறு, சாயாவனம், மானம்பாடி, திருமீயச்சூர்) கண் அகழும் கண்ணப்பரை அமர்ந்த கோலத்திலேயே காட்டுகின்றன. சில சிற்பங்களில் சிவகோசரியாரும் (தக்கோலம், மானம்பாடி, கூடலையாற்றூர்) சிலவற்றில் கண்ணப்பரின் வேட்டை நாய்களும் (தக்கோலம், கூடலையாற்றூர்) மானம் பாடியில் உடும்பும்கூடக் காட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அமர்ந்தே கண்ணகழும் கண்ணப்பரைக் குருதி வழியும் சிவலிங்கத்தின் இரண்டாம் கண்ணை அடையாளப்படுத்திக் கொள்வதற்காக அதே அமர்நிலையில் இருந்தவாறே

Koviloor Digital Library

காலை மட்டும் உயர்த்திப் பாதத்தை அக்கண்ணில் பொருத்தும் நிலையில் பிற்சோழ வேந்தரான இரண்டாம் இராஜராஜர் காலத் தாராசுரம் பதிவு செய்துள்ளது. இங்குதான் தமிழ்நாட்டுக் கலை வரலாற்றில் முதன்முறையாகத் திருத்தொண்டர் வரலாறு குறுஞ் சிற்பத் தொடராகக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. தாராசுரத்திற்குக் காலத்தாற் பிற்பட்ட கண்ணப்பர் சிற்பங்களில் அவர் நிற்பதையும் அந்நிலையிலேயே அவர் பாதம் குருதி வழியும் சிவபெருமான் கண்ணில் இருத்தப்பட்டிருப்பதையும் (மூவலூர், கண்டீசுவரம் முதலிய பல கோயில்கள்) காண முடிவது கருதத்தக்கது.

காலமாற்றம் காட்டும் இந்தக் காட்சி மாற்றம் சேக்கிழாருக்கு முற்பட்டுத் தமிழ்நாட்டில் உலவிய கண்ணப்பர் கதை அவரால் சமூகச் சூழல்களுக்கு ஏற்ப மாற்றி அமைக்கப்பட்டமையை நிறுவும். சேக்கிழாரின் பாடலடிகள் இக்காட்சியை முன்னிறுத்தும் போதும் கண்ணப்பர் அமர்ந்திருந்தாரா அல்லது நின்றவாறு இப்பணி செய்தாரா என்பதைத் தெளிவுபடுத்தவில்லை. ஆனால், அதே சமயம் முதல் கண் அகழ்வின்போது அவர் அமர்ந்திருந்தமையை, 'மகிழ்ந்து முன்னிருந்து' என்ற தொடரால் குறித்து, குருதி நின்றநிலை கண்ட கண்ணப்பரின் செயற்பாட்டை வண்ணிக்கையில் 'நிலத்தினின்று ஏறப் பாய்ந்தார்' எனும் தொடரைப் பெய்து உறுதிப்படுத்துகின்றன.

வழிபாட்டு முறைகள்

தமிழரின் அன்புசால் வழிபாட்டு முறைக்கும் நிறுவனப்படுத்தப்பட்ட ஆகம வழிபாட்டு முறைக்கும் இடையே தொடர்ந்து நிலவிவரும் கால நிரலான கருத்து வேறுபாடுகளைத் தமிழ் இலக்கியங்களுள் சில இலைமறை காயாகவும் சில வெளிப்படையாகவுமே பதிவு செய்துள்ளன. அத்தகு பதிவுகளில் கண்ணப்பர் தொட்டுப் பிறந்த இலக்கியங்களில் காணப்படுவன குறிப்பிடத்தக்கன. கண்ணப்பத்தேவர் திருமறமும் கண்ணப்ப நாயனார் புராணமும் இவ்விரு வழிபாட்டு முறைகளையும் எதிரெதிராக நிறுத்தி, இறைவனையே தீர்ப்பாளராகக் காட்சிப்படுத்தும் கூர்மை குறிப்பிடத்தக்க உத்தியாகப் பளிச்சிடுகிறது.

திருமறத்தின்படி, துகில் இடைச்சுற்றி, தூநீராட்டி, விரை மலர், புகை, விளக்கு, அமுது இட்டு, பட்டமாலை அலங்கரித்து, அருச்சனை செய்து, முத்திரை காட்டி, மந்திரம் எண்ணி, வலம்இடம் வந்து வழிபாடு செய்கிறார் கோசரியார். ஆனால், கண்ணப்பரோ வாய்க்குள் வைத்துக் கொணர்ந்த நீரை இறைவன் மேல் பெய்து, தலையில் செருகி

Koviloor Digital Library

வைத்திருந்த மலரை அவர்க்குச் சூட்டி, தாம் சுட்டுச் சுவைத்துக் கொணர்ந்திருந்த இறைச்சிப் பானகம் படைத்து, உள்ளம் கசிந்து, காதலில் கூத்திட்டு வழிபடுகிறார். சிவகோசரியாரை 'வழிபடக் கடவ மறையோன்' எனச் சுட்டும் திருமறம், அவர் செய்த வழிபாட்டையும் 'தொழில் பூசனை'யாகவே குறிப்பிடுவது எண்ணத்தக்கது. அதே சமயம், கண்ணப்பர் இறைவனைக் கண்டு உள்ளம் கசிபவராகவும் இறைக் காதலில் ஆடுபவராகவும் குரைகழல் அன்பொடும் இறுக இறைஞ்சுபவராகவும் காட்டுவதுடன், சிவகோசரியார் செய்து வைத்தன அனைத்தையும் தம் கால் தொடு செருப்பினால் நீக்கியவராகவும் படம்பிடித்துள்ளது.

சிவகோசரியாரின் பூசனையை 'எய்திய சீர் ஆகமத்தில் இயம்பிய பூசனை'யாகச் சுட்டும் சேக்கிழார், 'நீராட்டல் இலைப் பூச்சூட்டல் ஊட்டல்' என அவ்வழிபாட்டைச் சுருங்கவே காட்டுகிறார். ஆனால், கண்ணப்பரின் வழிபாட்டையும் அதற்காக அவர் மேற்கொண்ட முயற்சிகளையும் பல பாடல்களில் மிக விரிவாகப் பேசிக் களிக்கிறார். வாயினில் அதக்கிப் பார்த்துத் தேர்ந்த ஊனமுது கல்லை யினையும் இறைவனை மஞ்சனமாட்ட வாயினில் நன்னீரினையும் கொய்த மலர்களைத் தலையில் செருகிய நிலையினையும் எடுத்துரைத்து, ஒரு கையில் படையலும் ஒரு கையில் வில்லும் நாணும் கொண்டு குடுமித் தேவரை அடையும் கண்ணப்பர், அவர் உச்சிமீதிருந்த மலரைத் தம் செருப்புக் காலால் மாற்றி, வாய் நீரை இறைவன் மீது உமிழ்ந்து மஞ் சனமாட்டி, மலர் சூட்டி உணவு படைத்ததையும் கிளம்புகிறார்.

கண்ணப்பரின் வழிபாட்டு முறை சிவகோசரியாருக்கும் சிவகோசரியாரின் வழிபாட்டு முறை கண்ணப்பருக்கும் ஒவ்வாமல் திகழும் நிலையைப் பாடலடிகள் படம்பிடிக்கின்றன. கண்ணப்பர் தம் கால் செருப்பால் கோசரியாரின் தொழில் பூசனையை மாற்றி, நேரடியாக வழிபாட்டினை மேற்கொள்கிறார். சிவகோசகரோ, வேட்டுவர் அன்போடு இட்ட இறைச்சி, எலும்பு ஆகியவற்றுடன் அவரால் பதிவான செருப்படி, நாயடி ஆகியவற்றையும் திருஅலகால் மாற்றுகிறார். மாற்றிய பிறகு நீராடி, பழுது தீர பவித்திரமாம் செயல் புரிந்து, மஞ்சனம் முதலாக வரும் பூசை முழுதும் முறைமையில் முடிக்கிறார்.

(தொடரும்)

Koviloor Digital Library

(திருவிளையாடற் புராணம் தொடர்)

ஆடலுக்கு ஆட்படுவோம்

திருக்கயிலாயச் சிறப்பு

பகுதி-8

காசி ஸ்ரீ முனைவர்
நா.ரா.கி.காளைராசன்
(மேனாள் துணைப்பதிவாளர், அழகப்பா பல்கலைக்கழகம்)

உலக உயிர்களுக்கெல்லாம் தாயானவள் மலையத்துவச பாண்டியனின் மகளாகத் தோன்றி மதுரையின் அரசியான அன்னை தடாதகைப் பிராட்டியார். அன்னை ஆட்சி செய்த பாண்டிய நாடே உலக உயிர்களுக்கெல்லாம் தாய்நாடு ஆனது. அவள் பேசிய தமிழ்மொழியே தாய்மொழி ஆனது. பாண்டிய நாட்டின் சிறப்பையும், அதன் தலைநகராகிய மதுரை மாநகரின் வளத்தையும் கடந்த இதழ்களில் கண்டோம்.

அன்னை தடாதகையை மணந்து மதுரையின் மன்னனாகி நம்மையெல்லாம் ஆண்டருளும் அந்த சோமசுந்தரக் கடவுளின் திருக்கயிலாயச் சிறப்புகள் சிலவற்றை இங்கே காண்போம். அதற்கு முன், ஒரு சிறுகதை.

தாய்தந்தை யாரென்று அறியாத ஒருவன் தெருக்களிலே பிச்சை எடுத்துக் கொண்டிருந்தான். அவனுடைய சொத்தாகக் கையிலே திருவோடும், கழுத்திலே ஒரு உத்திராட்சமும் இருந்தன. பிச்சையிட விரும்பாத ஒரு பெட்டிக்கடைக்காரர், அந்த உத்திராட்சத்தை என்னிடம் கொடு 100 ரூபாய் தருகிறேன் என்றார். என்னிடம் கொடு 1,000 ரூபாய் தருகிறேன் என்றார் அடுத்திருந்த பலசரக்குக் கடைக்காரர். நான் 10,000 ரூபாய் தருகிறேன் என்றார்

Koviloor Digital Library

வானவர் முனிவோர்

கரங்க டந்தலை மு கி ழ் ந் தி ட க் கருணைசெய் தவிச்சை

உரங்க டந்துரை உணர்வெலாங் கடந்தரு மறையின்

சிரங்க டந்தவ னிருப்பது திருக்கயி லாயம்.

திருக்கயிலாயத்தில், வரங்கள் வேண்டி வானவர்களும் முனிவர்களும் தங்களது கைகளைத் தலைக்கு மேல் குவித்து வைத்துக்கொண்டு, சிவபெருமானை நோக்கித் துதிசெய்கின்றனர். அவர்களிடம் அன்புகொண்டு, நான்கு வேதங்களும் அறியமுடியாத பரமசிவன் வீற்றிருக்கின்றார். இந்திராதி தேவர்களின் பதவியும், தாமரைப் பூவில் வாசம் செய்யும் பிரம்மாவின் பதவியும், சக்கராயுதத்தை உடைய திருமாலின் பதவியும், எல்லாமும் அழியும் ஊழிக் காலத்திலும் திருக்கயிலாயமானது அதனுடைய வலிமை குன்றாது ஓங்கி வளரும். அங்கே அரம்பையர்களின் நடன ஒலியும், வீணை முதலான நரம்புக் கருவிகளின் ஒலியும், மத்தளம் முதலான தோற்கருவிகளின் ஒலியும், யானைகளின் ஒலியும்,

அருகில் இருந்த நகைக்கடைக்காரர். நகைக்கடைக்கு வந்திருந்த ஒரு வைரவியாபாரி இது ஒரு உத்திராட்ச வடிவிலான வைரக்கல், இது உலகச் சந்தையில் 1,00,00,000 ரூபாய் விலை போகும் என்று அறிந்து அந்தப் பிச்சைக்காரரைத் தன் வீட்டிற்கே அழைத்துச் சென்று விட்டார். இந்தக் கதையின் வழியாக, ஒரு பொருளின் சிறப்பை அறிந்தவர், அவரவர் அறிந்தவகையில் அந்தப் பொருளுக்கு விலை பேசியுள்ளனர் என்று நாம் அறிந்து கொள்ளலாம். “அறிவுடையார் ஆவது அறிவார்“ என்கிறார் திருவள்ளுவர். நாமும் திருக்கயிலாயச் சிறப்புகள் சிலவற்றைத் திருவிளையாடல் புராணத்தின் வழியே அறிந்து உணர்ந்து உய்வடைவோம்.

வரங்க டந்தரு ளௌமுது

Koviloor Digital Library

கண்டத்தில் விஷத்தை நிறுத்தித் தேவர்களைக் காத்த சிவபெருமான் வீற்றிருக்கிறார். அங்கு இருக்கும் தீர்த்தக் கரையில் சந்திரகாந்தக் கல்லில் நவரத்தினங்களைப் பதித்து தேவதச்சனால் கட்டப்பெற்ற ஆயிரக்கால் மண்டபம் ஒன்று உள்ளது. அந்த மண்டபத்தில் நட்சத்திரங்களுடன் பூரணச் சந்திரன் ஒளிவிடுகின்றது.

அந்த மண்டபத்தில், ஓர் ஆசனத்தின் மேல் பதினெண் புராணமும் அருளிச்செய்த சூதபுராணிகர் எழுந்தருளி இருந்தார். அப்போது சிவதீர்த்தத்தில் சம்புபத்தன், சதாநந்தன், உத்தமன், மகோதரன், உக்கிரவீரியன், பிரசண்டன் முதலான முனிவர்கள் எல்லாரும் தீர்த்தமாடி வந்து சந்தியாவந்தனம் முதலானவற்றைச் செய்து முடித்தனர். பின்னர் சந்திரனைத் தன் தலையில் சூடியுள்ள அந்தச் சோமசுந்தரரைத் தியானித்துத் துதி செய்து வணங்கினர். பின்னர் பரமசிவனிடத்து மிகுந்த அன்பு உடையவரான சூதபுராணிகரை வணங்கித் துதித்தனர். அவரிடம் நீங்கள் வேதம், ஆகமம், புராணம்,

அருவியின் ஒலியும் ஒன்றாகச் சேர்ந்து எல்லாத் திசைகளிலும் விண்ணில் எதிரொலித்துக் கொண்டே இருக்கின்றது.

இமயத்தில் உள்ள ஏராளமான வெள்ளி நிறத்திலான சிகரங்களில் இருந்து ஆகாய கங்கை பெருக்கெடுத்து ஓடுகிறது. கோட்டுப்பூ, நிலப்பூ, நீர்ப்பூ, கொடிப்பூ ஆகிய நால்வகை மலர்களால் சிவபெருமானுடைய திருவடிகளை முனிவர்கள் அருச்சனை செய்கின்றனர். யானைகளும், புலிகளும், படங்களையுடைய பாம்புகளும், ஐராவதமும் சிவபெருமானைச் சூழ்ந்திருக்கின்றன. அந்த முக்கண் முதல்வனை வியாக்கிரபாதரும் பதஞ் சலியாரும் போற்றித் துதிக்கின்றனர்.

புராண வரலாறு

எப்பொழுதும் அளவில்லாத உயர்வான பெருமைகளை உடைய அந்த வெள்ளி மலைமேல், தன்

Koviloor Digital Library

ஸ்மிருதி முதலாகச் சொல்லுகின்ற சாஸ்திரங்கள் எல்லாவற்றையும் கற்றுத் தாங்கள் உணர்த்துள்ளீர்கள். சிவபெருமான் வாழும் தலங்கள் பற்றிய புராணங்களையெல்லாம் எங்களது மனதுக்கு இசைய அருளிச் செய்தீர்கள். இவற்றுள் தலம், தீர்த்தம், மூர்த்தி என்ற மூன்றாலும் சிறப்புப் பெற்ற, அறிவுக்கு எட்டாத சிறப்புகளையுடைய ஒரு தலத்தைச் சொல்ல வேண்டும் என்று கேட்டார்கள்.

அது கேட்ட சூதபுராணிகரும் மிகவும் மகிழ்ந்து, “பரமசிவனுடைய தலங்களில் கேட்டவுடன் முத்தியைத்

Koviloor Digital Library

தருவதாகிய ஒரு தலம் உள்ளது" என்று சொல்லத் தொடங்கினார். பதினெண் புராணங்களில் ஒன்றாகிய ஸ்காந்தம் ஆறுசங்கிதையை உடையது. அந்த ஆறும் சனற்குமாரரும், சூதரும், சங்கரரும், விஷ்ணுவும், பிரமாவும், சூரியனும் தங்கள் தங்கள் பெயரினால் சொல்லப்பட்டன. அவற்றில் சங்கர சங்கிதை என்பது பரமசிவன் பார்வதிக்குச் சொன்ன சிறப்புடையது. அப்போது, பார்வதியின் மடியிலிருந்து குமாரக் கடவுளும் அதை நன்றாகக் கேட்டார். அவர் தன்னை வழிபடுகின்ற அகத்திய முனிவருக்கு உபதேசித்தார். அது நாள்முதல் அதற்குப் பெயர் "அகத்திய சங்கிதை" என்றானது. அந்த அகத்திய சங்கிதையானது பரமசிவனுடைய திருவடி நிழலாகிய பேரின்ப வீட்டைத் தருவதாகிய ஒரு தலத்தைச் சிறப்பித்துச் சொல்லுகிறது.

இவ்வாறு சிவபெருமானால் பார்வதி தேவிக்குச் சொல்லப்பட்ட சிறப்புடைய திருத்தலம் எதுவென்றால், திருவாலவாய் என்ற மதுரை ஆகும். திருவாலவாய் என்ற அதன் பெயரைக் கேட்டவுடனே முத்தி தருவது ஆகும் என்று தொடங்கி, சூதமுனிவர் மதுரையின் சிறப்புகளை முறையாகச் சொல்லத் தொடங்கினார்.

நாரதர் காட்டிய நல்வழி

பிரமதேவன், இறக்க முக்தியைத்தரும் காசியில், தனது புத்திரருடனே முன்னொரு காலத்தில் அகத்தியன், வியாசன், நாரதன், சனகன், சனந்தனன், சனற்குமாரன், கௌதமன், பராசரன், வாமதேவன், வான்மீகி, வசிஷ்டன், சுகன் முதலான முனிவர்களுடனே சென்று, பத்து அசுவமேத யாகம் முடித்து, யாகம் செய்து வைத்த அந்த முனிவர்களை உபசரித்தார். அதன் பின்னர் அவரது சத்திய லோகத்திற்குச் சென்றுவிட்டார். பிரம்மா சென்ற பின்பு, அந்த முனிவர்கள் எல்லோரும் அருள்மிகு காசி விசுவநாத சுவாமியைத் தரிசித்து வணங்கினர். பின்பு அங்குள்ள தட்சிணாமூர்த்தி சந்நி தியில் இருந்து நாரத மகாமுனிவரைப் பார்த்து தலம், தீர்த்தம், மூர்த்தி என்ற மூன்றிலும் சிறந்த ஒரு சிவத் தலத்தைச் சொல்லி அருள வேண்டும் என்றனர். அது கேட்ட நாரதர், வேதவியாசரிடம் கேளுங்கள் என்றார். வேதவியாசரோ மாமுனிவரான அகஸ்தியரிடம் சென்று கேளுங்கள் என்றார்.

அகத்தியர் அருளிச் சொன்னது

இது கேட்ட முனிவர்கள் அகஸ்தியரிடம் சென்று, அவரை வணங்கி, விந்தியகிரியை அடக்கின முனிவரே! அலை கடலைக்

Koviloor Digital Library

குடித்த அருட்கடலே! முத்தமிழைப் பொழிந்த மேகமே! வடதிசையையும் தென்திசையையும் சமமாகச் செய்த ஆதாரமே! என்று அகத்திய முனிவரின் பெருமைகளையெல்லாம் சொல்லி வணங்கினர். அகத்திய முனிவரிடம் மூவகைச் சிறப்பும் உள்ள ஒரு சிவத் தலத்தை அருளிச்செய்ய வேண்டுமென வேண்டினர். அகத்திய முனிவரும் கணபதியையும், முருகக் கடவுளையும், தக்ஷிணாமூர்த்தியையும் வணங்கி அங்கயற் கண்ணியையும் சோமசுந்தரக் கடவுளையும் தியானித்துச் சொன்னார். உமாதேவிக்கு பரமசிவன் அருளிச் செய்த சங்கர சம்ஹிதையை எனக்குச் சுப்பிரமணியக்கடவுள் உபதேசித்தார். அந்தச் சங்கரசம்ஹிதையில் முக்தியை எளிதாகக் கேட்டவுடனே கிடைக்கச் செய்யும் ஒரு தலம் உண்டு. அது மூன்று சிறப்புகளையும் உடையது. எல்லாச் சிவத் தலங்களிலும் சிறந்தது. வேத வடிவான பரமசிவன் அறுபத்து நான்கு திருவிளையாடல் செய்தருளிய திருவாலவாய் என்னும் தலம் ஆகும். மண்ணுலகில் சிவலோகமென்று சொல்லப்படும். அந்தத் தலத்தின் மகிமையை முருகக் கடவுள் எனக்குச் சொல்லியபடியே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

முனிவர்களே! நீங்கள் பராமுகமின்றிக் கேளுங்கள் என்று சொல்லத் தொடங்கினார்.

நாமும் அகத்தியர் அருளிச் சொன்னவற்றைக் கற்றறிய ஆவலுடன் காத்திருப்போம்.

திருக்கயிலாயச் சிறப்பும், புராணவரலாறும் முற்றிற்று. அடுத்து வரும் இதழ்களில் திருவாலவாய் என்ற மதுரைத் திருத்தலத்தின் சிறப்புகளையும், அங்குள்ள மூர்த்தி தீர்த்தங்களின் சிறப்புகளையும் காண்போம்.

Koviloor Digital Library

தினசரி வாழ்க்கைக்குத் திருப்புகழ் - 5

கொடுப்பதில் இன்பம் கொள்வோம்



டாக்டர் ஜெயபாலன் வள்ளியப்பன்,
ஈப்போ, மலேசியா

அருணகிரிநாதர் திருப்புகழை ஒரு தோத்திர நூலாக மட்டுமல்ல, அதை அன்றாட மனித வாழ்க்கைக்கு உதவும் சாத்திர நூலாகவும் வடித்துள்ளார் . மனிதனின் லௌகீக வாழ்க்கைக்கு தொடர்புடைய இலக்கியங்களே காலங்கள் தோறும் நிலைத்திருக்கின்றன.

அந்த வகையில் திருக்குறள் போல் , திருமுறைகளைப்போல் , அ ரு ண கி ரி ந ா த ரி ன் இலக்கியங்களும் இன்றளவும் பயன்பாட்டில் இருக்கின்றது . இதன் காரணம் இன்றைய மனித வாழ்க்கைக்கு, தேவையான கருத்துக்கள் இந்த நூல்களில் எல்லாம் நிறைந்து இருக்கின்றன .

திருப்புகழில் அருணகிரிநாதர் சொல்லக்கூடிய அறங்களில் மிக முக்கியமானது கொடுத்து வாழ வேண்டு மென்பது . கொடுப்பதில்

Koviloor Digital Library

உள்ள இன்பத்தை பல இடங்களில் வலியுறுத்தி சொல்லுவார் அருணை முனிவர் .

ஏழைகளை அலையவிடும் எத்தர்கள்

அறுகுநுனி பனி என்று துவங்கும் திருவிடைமருதூர் திருப்புகழில் நாம் அன்றாடம் காணும் சில வேடிக்கை மனிதர்களைப் பற்றி அருணகிரிநாதர் குறிப்பிடுகின்றார் .

சிலரிடம் உதவி கேட்கச் சென்றால் ஏன் சென்றோம் என்று இருக்கும். இவர்கள் எந்த உதவியும் செய்ய மாட்டார்கள் , ஆனால் இங்கும் அங்குமாக உதவி கேட்ட எளியவர்களை அலைய விடுவதில் கில்லாடிகள்.

“வெறுமிடிய னொருதவசி யமுதுபடை யெனுமளவில்

மேலை வீடு கேள் ! கீழை வீடு கேள் !

திடுதிடென நுழைவதன்முன் எதிர்முடுகி யவர்களொடு

சீறி ஞாளிபோல் ஏறி வீழ்வதாய்

விரகினொடு வருபொருள்கள் சுவறியிட மொழியுமொரு

வீணி யார் சொலே ....”

அறுகுநுனி பனி [திருவிடைமருதூர் திருப்புகழ் 862]

“வெறு மிடியன் ஒரு தவசி” , அதாவது தவம் செய்யக்கூடிய ஏழை ஒருவர் “ஐயா பசிக்கிறதே அன்னம் இடுங்கள்” என்று பணக்காரர் ஒருவரிடம் கேட்கின்றார் . அதற்கு அவர் “மேல் வீட்டுக்காரரிடம் போய் கேள் , கீழே வீட்டுக்காரரிடம் போய் கேள்” , என்று விரட்டுகிறார். அதற்கு அந்த ஏழை “ஐயா, எல்லா இடங்களிலும் கேட்டேன், ஒன்றும் கிடைக்கவில்லை. ஏதாவது கொடும்“ என்று கூறி சிறிது படி ஏறி, வீட்டிற்குள் நுழைய முயலுகிறான் . இப்படி பசியோடு வருபவரை எதிரில் முடுகிப் போய், நாய்போல் சீறி விழுந்து விரட்டி அடித்தாராம் அந்த ஈனர். இப்படிப்பட்டவர்கள் இன்னும் பல கெடுதல் செய்வார்கள் . அவற்றை எல்லாம் இந்த திருப்புகழில் பட்டியலிட்டு , “முருகா இப்படிப்பட்ட ஈனப்பிறவிகள் நட்பு எனக்கு வேண்டாம் “ என்று முருகனை வேண்டுகிறார் அருணகிரிநாதர்.

கொடுக்க விட்டால் என்ன நடக்கும் ?

“செல்வத்துப்பயனே ஈதல் “என்பது புறநானூறு . “இறைக்கின்ற கிணறு ஊறும் இறைக்காத கிணறு நாறும்“

Koviloor Digital Library

என்பது முதுமொழி . வாழ்க்கையின் இன்பமே கொடுத்து வாழும் குணத்தில்தான் இருக்கின்றது என்று பல இடங்களில் பதிவு செய்கின்றார் அருணகிரிநாதர். இருக்கின்றபோது கொடுக்காவிட்டால் அந்தப் பொருள் திருடர்கள் கையில் சேரும் என்று கந்தர் அலங்காரத்தில் எச்சரிக்கின்றார்.

"வேடிச்சி கொங்கை விரும்புங் குமரனை மெய்யன்பினாற்

பாடிக் கசிந்துள்ள போதே கொடாதவர் பாதகத்தாற்

தேடிப் புதைத்துத் திருட்டிற் கொடுத்துத் திகைத்திளைத்து

வாடிக் கிலேசித்து வாழ்நாளை வீணுக்கு மாய்ப்பவரே !"

53 வேடிச்சி கொங்கை கந்தர் அலங்காரம்

"வேடர் மகளை விரும்பும் குமரனை உண்மையான அன்பினால் வாடி மனம் கசிந்து தங்களிடம் பொருள் இருக்கின்ற போதே கொடுக்காதவர்கள் , நேர்மை இல்லாத வழியில் அவர்கள் சேர்த்து புதைத்து வைத்த செல்வத்தை திருடர்கள் கையில் கொடுத்து வாட்ட முற்று , மகிழ்ச்சி இன்றி வாழ்க்கையை வீணாக்குபவர்கள் " என்பது இதன் பொருள் .

எவ்வளவு கொடுப்பது ?

"நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர்,

நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்,

அதுவுமற்றோர் வாய்ச் சொல் அருளீர்,

ஆண்மையாளர் உழைப்பினை நல்கீர் "

என்பது பாரதியின் வாக்கு . அவரவர் இயன்றதைச் செய்ய வேண்டும் என்பது இதன் கருத்து.

இதையே பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு திருமூலரும் சொல்லி வைத்தார் .



Koviloor Digital Library

“யாவர்க்குமாம் இறைவற்கு ஒரு பச்சிலை

யாவர்க்குமாம் பசுவிற்கு ஒரு வாயுறை

யாவர்க்குமாம் உண்ணும்போது ஒரு கைப்பிடி

யாவர்க்குமாம் பிறர்க்கு ஒரு இன்னுரை தானே “ திருமந்திரம்

“நொய் அரிசியில் ஒரு சிறுபங்கு கொடுத்தாலும் அதுவும் புண்ணியம் தான் “ என்று கந்தர் அலங்காரத்தில் குறிப்பிடுகின்றார் அருணகிரிநாதர். ஆனால், அந்தச் சிறிய தர்மத்தை கூட கதிர்வேல் வடிவேலனை வாழ்த்தி கொடுக்க வேண்டும் என்கின்றார் .

இதற்குக் காரணம் ,நம்முடைய செல்வம் எல்லாம் முருகன் கொடுத்தது . அவன் கொடுத்ததை , அவனை வாழ்த்தி கொடுப்பதே சரியான செயல் .

“பிறக்கும் பொழுது கொண்டு வந்ததில்லை பிறந்து மண்மேல்

இறக்கும் பொழுது கொண்டு போவதில்லை இடைநடுவில்

குறிக்கும் இச் செல்வம் சிவன்தந்த தென்று கொடுக்கறியாது

இறக்குங் குலாமருக்கென் சொல்லுவேன்கச்சி ஏகம்பனே.”

என்பது பட்டினத்தார் வாக்கு .

இந்தக் காரணத்தால் அளவில் கொஞ்சமாக இருந்தாலும் வடிவேலனை வாழ்த்தி வறிஞர்க்கு கொடுக்கச் சொல்கின்றார் .

“ வையிற் கதிர்வடி வேலோனை வாழ்த்தி வறிஞர்க்கென்றும்

நொய்யிற் பிளவள வேனும் பகிர்மின்க ளுங்கட்கிங்ஙன்

வெய்யிற் கொதுங்க வுதவா உடம்பின் வெறுநிழல்போற்

கையிற் பொருளு முதவாது காணுங் கடைவழிக்கே “

கந்தர் அலங்காரம் பாடல் 18 … வையின் கதிர்

“ கடும் வெயில் , ஒதுங்க நிழல் வேண்டும் . உங்கள் உடம்பின் நிழல் உங்களுக்கு உதவுமா ? அதுபோல , கையில் இருக்கும் உங்கள் பொருள் உங்களின் கடைசி வழிக்கு உதவாது “ என்ற கூற்று இன்றைக்கும் மிகப் பொருந்தும் .

யாரை நினைத்துக் கொடுக்க வேண்டும் ?

ஈதல் என்பது பற்றை விடும் முதல் முயற்சி . நான், எனது என்று பற்றும் , ஆசையும் கொடுக்கும்பொழுது குறைகின்றது . மனம் நிறைகின்றது . இதுதான் கொடுப்பதில் வரும்

Koviloor Digital Library

இன்பம். இதை ஈத்துவக்கும் இன்பம் என்பார் வள்ளுவப் பெருந்தகை. பொருட்களின் மேல் உள்ள பற்றை விடும் பொழுது , இது என்னுடையது அல்ல முருகன் தந்தது என்ற எண்ணம் மேலிடும். அப்பொழுது முருகன் கொடுத்ததை, அவனுடைய அடியார்களுக்கு கொடுக்கத் தோன்றும்.

இந்த அறிவுரையை அருணகிரிநாதர் நம் மனதிடம் சொல்லுகின்றார்.

“கெடுவாய் மனனே கதி கேள்: கரவாது

இடுவாய்; வடிவேல் இறைதாள் நினைவாய்;

சுடுவாய் நெடு வேதனை தூள்படவே;

விடுவாய் விடுவாய் வினை யாவையுமே ! “

கந்தர் அநுபூதி 7 கெடுவாய் மனனே

கெட்டுப் போகக்கூடிய மனமே. நீ கதி பெறுவதற்கு வழியைக் கூறுகின்றேன். உன்னிப்பாக கேள் ! ஒளித்து வைக்காமல் அன்புடன் தானம் செய்வாயாக; வடிவேல் இறைவனின் பாதத்தை நினைத்து தானம் செய்வாய் .

இதற்குக் காரணம் எவர் ஒருவர் முருகனின் பெயரைச் சொல்லி

தானம் கொடுக்கின்றாரோ, அவர்கள் கர்ம வினைகள் குறையும். எல்லா வினைகளும் குறையும் . நல்வினையும், தீவினையும் செய்யும்பொழுது குறையும் பொழுது அவர்களுக்கு அடுத்த பிறவி இருக்காது . அவர்களின் கஷ்டங்கள் நீங்கும். அவர்கள் நாள்பட்ட துன்பத்திலிருந்து வெளிவரலாம்.

இப்படி பல இடங்களில் அருணகிரிநாதர் கொடுப்பதால் வரக்கூடிய நன்மைகளையும் , அதன் அவசியத்தையும் கூறுகின்றார். நடமாடும் கோயிலான அடியார்களுக்கு கொடுத்தால் , அது படமாடும் கோயிலான பழனி ஆண்டவனிடம் போய்ச் சேருமல்லவா ? ஆகவே , கொடுப்பதில் இன்பம் கண்டு , அருணகிரிநாதர் காட்டிய வழியில் ஆறுமுகன் அருள் பெறுவோம் .

Koviloor Digital Library

கோவிலூர் ஆதீன வெளியீடுகள் கோவிலூர் புதையல்கள் - 22

திருக்களர் ஸ்ரீ வீரசேகர ஞான தேசிகர்

அறுபதாவது ஆண்டு நிறைவு குருபூஜை வைர விழா நினைவு மலர்

- நூல் அறிமுகம்

- கு. அன்பு மெய்யப்பன்,
உதவிப் பேராசிரியர்,
இராமசாமி தமிழ்க் கல்லூரி,
காரைக்குடி - 3.

கோவிலூர் மடத்தின் ஐந்தாம் பட்டம் சீர் வளர் சீர் வீரசேகர ஞானதேசிக சுவாமிகளின் 60ஆம் ஆண்டு குருபூசையில், இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது. இந்நூல் திருக்களர் வீரசேகர ஞானதேசிக சுவாமிகள் மடத்தின் மடாதிபதி கிருஷ்ணானந்த சுவாமிகளால் 1971 இல் நேஷனல் பிரிண்டர்ஸ். தஞ் சாவூரில் பதிப்பிக்கப்பெற்று,வெளி யிடப்பட்டுள்ளது.

கோவிலூரின் ஏழாம் மடாதிபதியாக இருந்த சீர் வளர் சீர் மகாதேவ ஞானதேசிகரின் மாணாக்கராக 1919இல் கோவிலூர் வந்து சேர்ந்தவர் கிருஷ்ணானந்த சுவாமி. திருக்களர் மடாலயத்தைக் கவனித்துக்கொள்ள யாரை நியமிக்கலாம் என மகாதேவ சுவாமிகள் கருதிய போது, பல மொழிப் புலமை நிரம்பியவரான சென்னை, வீர.சுப்பைய ஞானதேசிகரை நியமிக்க முடிவு செய்துள்ளார். இவரால் பிற்காலத்தில் சென்னையில் கோவிலூர் கிளை மடம் ஒன்று உருவாக்கப்பட்டு செயல்பட்டுள்ளது)

Koviloor Digital Library

உ
ஸ்ரீ திருக்களர் ஆண்டவர் என வழங்கும்
ஸ்ரீ வீரசேகர ஞானதேசிக சுவாமிகளின்
அறுபதாவது ஆண்டு நிறைவு

குருபூஜை வைர விழா
நினைவு மலர்

ஸ்ரீ வீரசேகர ஞானதேசிக சுவாமிகள்

இயற்றியவர்
மகா. கோவிந்தசுவாமியவர்கள்
கோவிலூர் மடம்.

நூலின் இணைய இணைப்பு

ஆனால், விருப்பமில்லாது பதவியேற்ற சுப்பைய சுவாமிகள் . பதவியேற்று பின்னர் விலகிக்கொண்டுள்ளார். அந்நிலையில், திருக்களர் மடத்திற்கென கடன்கள் இருந்ததாகக் கூறப்படுகிறது. அப்போது கோவிலூர் மடத்தில் மாணாக்கராக இருந்த கிருஷ்ணானந்த சுவாமிகளுக்கு 26 வயது. அவர் மடாதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார். மடத்தினையும் சிறப்பாக நடத்தியதோடு, கடன்களையும் அடைத்துள்ளார் சுவாமிகள். இவரது காலத்தில் திருக்களர் ஆண்டவர் சமாதிக் கோயிலுக்கும், பாரிஜாதவனேசுவரர் திருக்கோயிலுக்கும் திருப்பணிகள் செய்து, கி.பி. 1971இல் திருக்குட நீராட்டு விழாவும் செய்துள்ளார். அவரால் இந்நூல் பதிப்பிக்கப்பட்டுள்ளது சாலப் பொருத்தமே.

நூல் ஆசிரியர்

இந்நூலை இயற்றியவர் மகா கோவிந்தசுவாமி என்பவராவார். இவர், கோவிலூர் மடத்தின் எட்டாம் பட்டமாக இருந்த சீர் வளர் சீர் சோமசுந்தர ஞானதேசிகரின் மாணக்கராவார்.

வீரசேகர ஞானதேசிகர் சிறப்பு

கோவிலூர் வேதாந்த மடத்தின் வரலாற்றில் சீர் வளர் சீர் வீரசேகர ஞானதேசிக சுவாமிகளுக்கு என்று தனித்த இடமுண்டு. மடத்தின் அனைத்துப் பகுதிகளும் முழுமையாக கட்டி முடிக்கப்பெற்றது சுவாமிகளின் காலத்தில்தான். சீர் வளர் சீர் முத்துராமலிங்க ஞானதேசிகர் காலம் முதல், நான்காம் பட்டம் சீர் வளர் சீர் இராமசாமி ஞானதேசிகரின் காலம் வரை வெள்ளாடைத் துறவிகளாகவே இருந்துள்ளனர். வீர சேகர ஞானதேசிகர் பட்டத்திற்கு வந்த பின்னரே, காவியாடை உடுத்தும் வழக்கத்தைக் கொண்டு வந்துள்ளார். கோவிலூர் மடம் தனது குரு பீடமாகக் கருதுவது சிருங்ககிரி மடத்தை.

Koviloor Digital Library

அதைப் பின்பற்றி காவியாடையைத் துறவிகள் உடுத்தும் வழக்கத்தைக் கொண்டு வந்துள்ளார் சுவாமிகள்.

நூல் அமைப்பு

திருக்களர் ஆண்டவரின் முழு வரலாற்றையும் தெரிவிக்கும் வண்ணம் இந்நூல் அமைந்துள்ளது. அந்தாதிப் பாடல்களாக அமைந்த 60 எழுசீர் கழிநெடிலடி ஆசிரிய விருத்தப் பாக்களைக் கொண்டுள்ளது.25 பக்கங்களைக் கொண்டமைந்துள்ளது.

மிக எளிமையாகப் பொருள் விளங்கும் வண்ணம் மகா கோவிந்த சுவாமி அவர்கள் இயற்றியுள்ளார். வெண்பாவாலான கணபதி துதியுடன் பாடல்கள் தொடங்குகின்றன.

“ சீராருந் தெய்வத் திருக்களர்வீ ரேசரது

பாராரும் மாசரிதம் பாடவே நேராரும்

தேவாங் கணபதியின் சேவடியைச் சிந்தித்து

நாவாரப் போற்றுவாம் நன்கு”

என்று கடவுள் வாழ்த்துப் பாடலை அமைத்துள்ளார்.

47 உட்தலைப்புகளில் வீரசேகர ஞானதேசிக சுவாமிகளின் வரலாறு விரிவாக எடுத்துரைக்கப்பெற்றுள்ளது.

1.நகர்ச் சிறப்பும் தாய் தந்தையர் இருப்பும் கூறுதல்

2.புத்திரப் பேற்றை விரும்பி இறைவனிடம் வேண்டுதல்

3.வீர சேகரர் திரு அவதாரம்

4.அவதார காலம்

5.சாதக கன்மம் செய்தல்

6.நாமகரணம் வைத்தல்

7.சௌள கன்மம் இயற்றுதல்

8.வித்தியாப்பியாசம் செய்வித்தல்

9.திரவியார்ச்சிதம் புரியச் செய்தல்

10.பெரியாரைத் துணைகோடலும் கோவிலூர் குருகுலம் அடைதலும்

11.கோயிலூர் குரு பரம்பரை

12. வீரசேகரரை சிதம்பர தேசிகர் சீடராயமைத்தலும், வீரசேகரரின் குரு பணியும்

13.வீரசேகரர்க்குக் குருவானவர் நாநாசீவவாதக் கட்டளை பாடமோதல்

14.வீரசேகரர் தனது பந்துக்களை விலக்குதல்

15.வீரசேகரர் சந்நியாசம் பெறுதல்

16.வீரசேகரர் வேதாந்த நூல்கள் பாடம் கேட்டல்

17.வீரசேகரர் யாத்திரை சென்று சிதம்பரம் அடைதல்

18.வீரசேகரர் சிதம்பரத்தில் ஆற்றும் தொழில்கள்

19.வீரசேகரர் திருவாவடுதுறை தேசிகரைக் கண்டுவருதல்

Koviloor Digital Library

20.பொன்னம்பல ஞானதேசிக சுவாமிகள் சிதம்பரம் வந்து மடமியற்றி யிருத்தல்

21.பொன்னம்பல ஞானதேசிகர் வீரசேகரரை அழைத்துத் தமது மடத்தில் இருத்துதல்

22.பொன்னம்பல ஞான தேசிகர் கோவிலூர் குருகானம் காப்பவர்

23.வீரசேகரர் கோவிலூர் மடாலயத் தலைமை ஏற்றல் பிரமானு சந்தானத்துக்குத் தடையெனக் கருதி வளவனூர் சென்று ஒளிதல்

24.பொன்னம்பல ஞானதேசிகரின் அழைப்பும் வீரசேகரர் திரும்பி சிதம்பரம் வந்து சேர்தலும்

25.வீரசேகரர் பொன்னம்பல ஞானதேசிகரிடம் தன் மனநிலை கூறல்

26.பொன்னம்பல ஞானதேசிகர் வீரசேகரரைக் கோவிலூர் மடாலய குருஸ்தானத்தினை வகிக்கும்படி சம்மதிக்கக் கூறுதல்

27.வீரசேகர ஞானதேசிகர் கோவிலூர் குருஸ்தானம் வகிக்க சிறிது சம்மதித்தல்

28.விரசேகர ஞானதேசிகர் சிறிது மனக் கலக்கம் உறுதல்

29.வீரசேகர ஞானதேசிகரைப் பொன்னம்பல ஞானதேசிகர் தேற்றுவித்தல்

30.வீரசேகர ஞானதேசிகரும் பொன்னம்பல ஞானதேசிகரும் அடியார் கணங்களுடன் கோவிலூர் மடத்திற்குச் செல்லுதல்

31.வீரசேகர ஞானதேசிகரை கோவிலூர் மடாலய குருஸ்தானத்தினை வகிக்கச் செய்தல்

32.வீரசேகர ஞானதேசிக சுவாமிகள் குருஸ்தானம் வகித்தபின் மடத்தினை விருத்திக்குக் கொண்டுவரல்

33.ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகளின் சிருங்ககிரி மடம் ஸ்ரீ சச்சிதானந்த சிவாபி நவ நரசிம்மபாரதி சுவாமிகளைக் கோவிலூருக்கு அழைத்துவரல்

34.ஜகத்குரு ஸ்ரீ நரசிம்மபாரதி சுவாமிகளை எதிர்கொண்டு வரவேற்றல்

35.ஜகத்குரு நரசிம்மபாரதி சுவாமிகள் சிருங்ககிரியில் உள்ள ஸ்ரீ சாரதாம்பாள் கோயில் கட்டுவிக்கும்படி கூறுதல்

36.சிருங்ககிரி ஸ்ரீ சாரதாம்பாள் கோயில் கட்டத் திரவியம் ஈதல்

37.வீரசேகர ஞானதேசிக சுவாமிகளிடம் மாணவர் சரண்புகுதல்

38.வீரசேகர ஞானதேசிக சுவாமிகள் கோவிலூர் சிவாலயத் திருப்பணி செய்தலும், சிருங்ககிரி ஜகத்குரு வருகையும்

Koviloor Digital Library

39.வீரசேகர ஞானதேசிக சுவாமிகள் ஜகத்குருவின் ஆசி பஞ் சகம் பெறுதல்

40.ஸ்ரீ வீரசேகர ஞானதேசிக சுவாமிகள் திருவேரகத்தலம் செல்லல்

41.திருவேரகத் தலத்தில் பூவனூர் இராசு முதலியார் திருக்களர் சிவஸ்தலம் ஜீரணமுற்றிருப்பதை ஸ்ரீ வீரசேகர ஞானதேசிகரிடம் கூறுதல்

42.வீரசேகர ஞானதேசிகர் இராசு முதலியாருக்கு அறிவித்துக் கோவிலூர் செல்லுதலும், சில காலத்தின் பின் இராசு முதலியார் கோவிலூருக்குச் செல்லலும்

43.வீரசேகர ஞான தேசிக சுவாமிகளிடம் இராசு முதலியார் திருக்களர் ஆலயத் திருப்பணி செய்ய வேண்டுதலும், சுவாமிகள் திருக்களர்த் தலம் வருதலும்

44.வீரசேகர ஞானதேசிகர் திருக்களர்த் திருப்பணி செய்து கும்பாபிஷேகம் செய்தல்

45.வீரசேகர ஞானதேசிக சுவாமிகள் திருக்களர்த் தலத்தில் பிரமோற்சவம் நடத்தி இறைவன் ரதம், முத்தித் தானம் உறுதலும், வீரசேகர தேசிகர் வயதும்

46.வீரசேகர ஞானதேசிக சுவாமிகள் விதேக முத்தியடையுங் காலம்

47.ஸ்ரீ வீரசேகர ஞானதேசிக சுவாமிகள் விதேக முத்தியடைந்த விதமும், விதேக முத்தியும்.

த லை ப் பு க ளை வாசித்தலின் மூலமே முழு வரலாறும் விளங்கும் வண்ணம் எழுதியுள்ளது சிறப்புக்குரியது.

கோவிலூர் வேதாந்த மடத்தின் வரலாற்றில் இன்றியமையாதவர்களாக மூவரைக் குறிப்பிடுவர். முதலாமவர் மடத்தைத் தோற்றுவித்த கோவிலூர் ஆண்டவர், இரண்டாமவர் வீரசேகர ஞானதேசிகர், மூன்றாமவர் நாச்சியப்ப ஞானதேசிகர். இன்றும் அவர்களின் ஆசியோடுமடத்தின் பணிகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன . நகரத்தார் பெருமக்களின் வாழ்வோடு தொடர்ந்து இணைந்து செயல்பட்டு வருவதோடு, நகரத்தார்களின் வழிகாட்டியாக, குருபீடமாக விளங்கும் கோவிலூர் வேதாந்த மடத்தோடு, நகரத்தார் ஒவ்வொருவரும் தொடர்பினை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். அதற்காக வேண்டியாவது மடத்தின் வரலாற்றினை அறிந்து கொள்ள வேண்டும். இந்நூலின் மூலம்வீரசேகரரது வரலாற்றை அறிவோம் !திருத்தாள் பணிவோம் ! குருவருள் பெறுவோம் !

Koviloor Digital Library

காரைக்காலம்மையாரின் அற்புதத் திருவந்தாதி பாடல் நலம் - பாடல் 29

- வாகீச கலாநிதி
கி.வா. ஜகந்நாதன்

பேய்க் கோலம்

இறைவனுடைய திருக்கோலம் கண்டு எள்ளி நகையாடுவார் இருக்கின்றனர். அவர்கள் அவனிடம் அன்பில்லாத அயலார்; அவனுடைய பெருமையை அறியாதவர்கள்.

இறைவனுடைய திருமேனியில் உள்ள பொருள்கள் யாவும் சில கருத்துக்களைப் புலப்படுத்துகின்றன. அவை சில உண்மைகளை உள்ளடக்கிய அடையாளங்கள். அவன் செய்த திருவிளையாடல்களும் சில உண்மைகளைப் புலப்படுத்துபவை.

"குறிக ளும்அடையாளமும் கோயிலும்
நெறிக ளும்அவர் கின்றதோர் நீர்மையும்
அறிய ஆயிரம் ஆரணம் ஓதினும்
பொறிய வீர்உமக்கு என்கொல் புகாததே!"

என்று அப்பர் சுவாமிகள் பாடுகிறார். அவனுடைய திருவுருவம் சிலவற்றின் அடையாளங்கள். அந்த நுட்பத்தை அறியாமல் கோலத்தைப் புறக்கண்ணால் கண்டு குறை கூறுவோர் இறைவனுடைய அன்பர் கூட்டத்தில் சேரத் தக்கவர் அல்லர்: அவர்கள் புறம்பானவர்கள்.

இறைவன் திருக்கோலத்தை அவர்கள் எங்கே கண்ணால் பார்த்திருக்கப் போகிறார்கள்? தேவர்களாலும் அறிய இயலாத தேவதேவனாகிய அவன், குறை கூறும் பிறருக்கு எளிதில் காட்சி அளிப்பானா? அப்படியானால் அவர்கள் குறை கூறுகிறார்களே! எதைக் கண்டு திருக்கோயில்களில் வைத்து வழிபடும் உருவங்களிலும், பிற இடங்களில் உள்ள ஓவியங்களிலும், இறைவனைப் பற்றிய தோத்திரங்களிலும், புராணங்களிலும்

Koviloor Digital Library

காணும் செய்திகளைக் கொண்டு குறை கூறுகிறார்கள். அவற்றை முற்றும் கண்டறிவதில்லை. ஏதோ சில இடங்களைக் கண்டு பரிகாசம் செய்யத் தலைப்படுகிறார்கள்.

உண்மை அன்புடையவர்கள் இறைவனுடைய இயல்பைத் தெரிந்து கொள்ள முயல்வார்கள். "ஏன் இவ்வாறு இருக்கிறது" என்று ஐயம் எழுந்தால் ஆழ்ந்து படிப்பார்கள்; சிந்திப்பார்கள். பெரியவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்வார்கள்.

இறைவனுடைய இயல்புகளில் தம் சிற்றறிவுக்குப் புலப்படாத பல இருக்கலாம். நம் அறிவுக்குப் புலப்படாமையால் அவை பயனற்றவை, குறைபாடு உள்ளவை என்று எண்ணக் கூடாது. நாம் எல்லாம் அறிந்த முற்றறிவுடையவர்களா? முற்றும் உணர்ந்தவர் யாரும் இல்லை. அப்படியிருக்க, ஒரு பொருள் நமக்கு விளங்காவிட்டால் அந்தப் பொருள் இல்லையென்றோ, அது குறையுடையது என்றோ சொல்லக்கூடாது. "எனக்கு விளங்கவில்லை" என்று சொல்வதுதான் முறை.

கடவுள் இருக்கிறது. நமக்குக் கண்கூடாகத் தெரிகிறதா? இல்லை அதனால், கடவுள் இல்லை என்று சொல்லி விடலாமா? ஸ்ரீ ராமகிருஷ்ணர் இதை அழகான உவமையால் விளக்குகிறார். பகல் நேரத்தில் வானத்தில் நட்சத்திரங்கள் இல்லை என்று சொல்லலாமா? அதுபோல் கடவுள் நமக்குத் தெரியவில்லை என்பதனால் கடவுள் இல்லை என்று சொல்லுவது முறையன்று' என்கிறார் .

நுட்பமான கருத்துக்கள் எளிதில் விளங்குவதில்லை. விளங்காதபோது அவை பயனற்றவை என்று கருதி எள்ளி இகழக் கூடாது. அந்த நுட்பத்தை அறிந்துகொள்ள முயல வேண்டும், நுட்பம் விளங்காத வரையில், "நமக்குப் புரிந்து கொள்ளும் தகுதி வரவில்லை" என்றே எண்ணவேண்டும்.

இறைவன் பேயோடு மயானத்தில் நடமாடுகிறவன். அவனுக்குத் தேவரென்றும் பேயென்றும் வேறுபாடு இல்லை. யார் அன்பு செய்கிறார்களோ அவர்களோடு இணங்கியிருப்பான். மயானத்தையே தன் இருப்பிடமாகக் கொண்டவன் சிவபெருமான்; "கோயில் சுடுகாடு" என்று மாணிக்கவாசகர் சொல்கிறார் அல்லவா? பிற தேவர்கள் வாழ மாளிகைகளையும் அரண்மனைகளையும் கொடுத்துவிட்டு அவன் பேயோடு பேயாக மயானத்தில் வாழ்கிறான். எல்லோரும் கடைசிக் காலத்தில் போய்ச் சேரும் இடம் மயானம். எல்லோரையும் தனித் தனியே பார்க்காமல், எப்படியாவது அவர்களைச் சந்திப்பதற்கு, அவர்கள் இறுதியில் வந்து சேரும் இடத்தில் அவன் காத்திருக்கிறான். இந்த இடம் தூய்மையற்றதாயிற்றே, பேய் கூத்தாடும் இடம் ஆயிற்றே என்று அவன் எண்ணுவதில்லை. "தம்முடைய குழந்தைகள் வந்து

Koviloor Digital Library

சேருமிடம் அல்லவா?' என்று எண்ணி அங்கே நடிக்கிறான். பேயைப்போல உலவுகிறான். அவனுடைய அணியும் கோலமும் பேய்க் கோலமாக இருக்கின்றன. அந்தக் கோலத்தைக் கண்ட அன்பர்கள் அவனுடைய எளிய தன்மையையும், பிறருக்கே நலம் வழங்கும் பெருந்தன்மையையும், பெருங்கருணையையும் எண்ணி உருகுவார்கள். பிறரோ, 'இவனோ பேயாண்டி' என்று நகையாடுவார்கள்.

இவர்தமது

பூக்கோல மேனிப் பொடிபூசி என்புஅணிந்த

பேய்க்கோலம் கண்டார் பிறர்.

அவர்கள் இறைவனோடு ஒன்றிய கூட்டத்தினர் அல்லர். அவர்கள் புறத்தார்; அயலவர்; பிறர்.

அவர்கள் ஏன் இகழ்கிறார்கள்? இறைவனுடைய உண்மையை உணரும் ஆற்றல் இல்லாதவர்கள் அவர்கள். அவனைத் தெரிந்துகொள்வதற்கு அறிவாற்றல் இருந்தால் மட்டும் போதாது; அவனுடைய அருளாற்றலும் வேண்டும். வெறும் அறிவினால் விளங்காதது அருளினால் விளங்கும்.

"அருளாலே எவையும்பார் என்றான் அதை

அறியாம லேஎன்றன் அறிவாலே பார்த்தேன்;

இருளான பொருள்கண்ட தல்லால் கண்ட

என்னையும் கண்டிலன் என்னேடி தோழி"

என்று தாயுமானவர் இந்தக் கருத்தைச் சொல்கிறார்.

இறைவனுடைய பெருமையையும், அவனுடைய திருக்கோலத்தின் உண்மையையும், அவனுடைய திருவிளையாடல்களின் உட்கருத்தையும் உணரும் ஆற்றல் இல்லாதவர்களாகிய பிறர் அவனை இகழ்கிறார்கள். "ஐயோ பாவம்! அவருடைய அறியாமையைப் பாருங்கள்" என்று அம்மையார் சொல்கிறார்.

இவரைப் பொருள் உணர மாட்டாதார் எல்லாம்

இவரை இகழ்வதே கண்டீர்!

இறைவனே இகழ்வதற்குக் காரணம்

Koviloor Digital Library

இறைவனிடம் இகழ்ச்சிக்குரிய இயல்பு உண்டென்று கொள்ளக்கூடாது. இகழ்பவர்களுக்கு உண்மையை உணரும் வல்லமை இல்லை;

அவர்கள் அறிவு வன்மையுடையவர்கள் அல்லர்; மாட்டாதார், பொருளை, உண்மையை உணர மாட்டாதார்.

ஆகவே பக்தர்களே, எம் இறைவனை இப்படி இகழ்கிறார்களே என்று நீங்கள் வருந்தாதீர்கள்; கோபமும் அடையாதீர்கள். பாவம் இவர்களுக்கு உண்மை தெரியவில்லையே என்று இரங்குங்கள் என்று குறிப்பாகப் புலப்படுத்துகிறார் அம்மையார். அப்பர், "பொறியிலிர் உமக்கு என்கொல் புகாததே' என்றுதானே கேட்கிறார்?

இவரைப் பொருள் உணர மாட்டாதார் எல்லாம்

இவரை இகழ்வதே கண்டீர்! இவர்தமது

பூக்கோல மேனிப் பொடிபூசி என்பணிந்த

பேய்க்கோலம் கண்டார் பிறர்.

இறைவனுடைய அன்பர்கள் இறைவனுடைய திருக்கோலத்தின் உண்மையை உணர்ந்து புகழ்வார்கள் என்பது இதிலுள்ளதை எதிர்மறுத்துக் காணும்போது தெளிவாகும்.

நாலடியார் பாடல்கள்

துறவறவியல்

பாடல் 03

துகள்நீர் பெருஞ்செல்வம் தோன்றியக்கால் தொட்டுப்

பகடு நடந்தகூழ் பல்லாரோ டுண்க;

அகடுற யார்மாட்டும் நில்லாது செல்வம்

சகடக்கால் போல வரும்.

விளக்கம்:

குற்றமற்ற அறவழியில் ஈட்டிய பெருஞ் செல்வம் உண்டான காலம் தொடங்கி, எருமைக் கடாக்களைப் பூட்டி உழவு செய்து பெற்ற அப்பொருளைப் பலருடன் சேர்ந்து உண்ணுக! ஏனெனில், செல்வம் யாரிடத்தும் நிலையாக நிற்காமல் வண்டிச் சக்கரம்போல் (மேல்கீழாகவும், கீழ் மேலாகவும்) மாறிவரும்.

Koviloor Digital Library

கிருஷ்ணர் கொடுத்த குரு தட்சணை

தேனம்மை இலக்குமணன்,
காரைக்குடி

புராணக் காலங்களில் குழந்தைகள் குருகுல முறைப்படிக் கல்வி பயின்றனர். குருகுலக் கல்வி முடியும்போது தங்கள் குருவிற்குத் தக்க முறைப்படிக் குரு தட்சணை அளித்து வணங்கி மகிழ்வார்கள். கிருஷ்ணர் சாந்தீபனி முனிவரின் ஆசிரமத்தில் குருகுலக் கல்வி முடித்தபோது தட்சணை தர முன் வந்தும் அவரது குரு அதை மறுத்தார். ஆனால் தன் குருவிற்கு ஏதாவது தட்சணை தந்தே ஆக வேண்டும் என விரும்பிய கிருஷ்ணர் வித்யாசமான குரு தட்சணையைச் சமர்ப்பித்தார்.

மதுராவில் பலராமருக்கும் கிருஷ்ணருக்கும் கர்கர் என்ற மகரிஷி மூலம் பூணூல் சடங்கையும், காயத்ரி மந்திர உபதேசத்தையும் செய்வித்தார் வசுதேவர். அதன்பின் அவர்கள் சாஸ்திரங்களிலும் அஸ்த்ர சஸ்திரங்களிலும் தேர்ச்சி பெற சாந்தீபனி முனிவரின் ஆசிரமத்துக்கு வந்தனர்.

அவந்தி நாட்டில் உஜ்ஜயினி நகரத்தில் சாந்தீபனி முனிவரின் ஆசிரமம் அமைந்திருந்தது. வினயத்துடன் அவரை அணுகி இருவரும் தங்களுக்கு சகல வித்தைகளையும் கற்றுக் கொடுக்கும்படி வேண்டினார்கள். அவரும் வேதங்கள், உபநிஷத்துக்கள் ஆகியவற்றின் சாரத்தையும், வில் வித்தை மற்றும் அஸ்திரங்களுக்கான ப்ரயோக மந்திரங்களையும் கற்றுக் கொடுத்தார். நன்கு கற்று அறுபத்து நான்கு கலைகளிலும்

Koviloor Digital Library

ஒரு நாள் கடற்கரையில் விளையாடியபோது கடலில் மூழ்கி இறந்துவிட்டான் என்பது.

குருவிற்குத் தட்சணையாக ஏதாவது தர விரும்பிய கிருஷ்ணரோ எதையும் யோசிக்காமல் பிரபாசப் பட்டணம் எனப்படும் சோம்நாத் கடற்கரையை நோக்கி ஒரு ரதத்தில் தன் அண்ணன் பலராமருடன் புறப்பட்டார். இன்றும் என்றும் பல நூறு உயிர்களைக் காவு கொண்ட பிரபாசப் பட்டினக் கடற்கரை அலை வீசிக் கொண்டிருந்தது. இருண்ட நீலக் கடலின் மேலே எங்கெங்கும் தகிக்கும் சூரியனின் அனல் வெப்பம். மனித உயிர்களைத் தூண்டிலில் போட்டுப் பிடிப்பதைப் போல அலைகள் நுரைதள்ளிக் கொண்டிருந்தன.

குருவினது குழந்தையை எப்படியாகிலும் திரும்பப் பெற்றே ஆகவேண்டும் என்ற நோக்கத்தில் ”சமுத்திரராஜனே.. சாந்தீபனி முனிவரின் மகனை ஏன் விழுங்கினாய். எங்கள் குருவும் குருபத்தினியும் மகன்

Koviloor Digital Library

எல்லாவற்றையும் நான் விழுங்கி விடுவேன் அக்கினியைப் போல. திரும்பவெல்லாம் தர இயலாது. அச்சிறுவன் அப்போதே யம உலகை அடைந்துவிட்டான்” என்று கூறவும் கோபம் கொண்ட கிருஷ்ணர் அவனை அங்கேயே கொன்றார். அங்கே கிடைத்த சங்கை எடுத்துக் கொண்டு

இல்லாமல் வாடுகிறார்கள். தயவுசெய்து அவனை இப்போது திருப்பிக் கொடு “ எனக் கேட்டார். கிருஷ்ணரைக் கண்ட சமுத்திர ராஜன் அலைபொங்க ஓடி வந்து அவரது காலடியில் வீழ்ந்தான்.

“ஐய.. நான் விழுங்கவில்லை. பாஞ்சனன் என்ற அசுரன் கடலில் சங்கு வடிவம் கொண்டு அனைவரையும் விழுங்கி விடுகிறான்.” என்று கூறினான். உடனே கிருஷ்ணன் கடலில் குதித்துத் தேடினார். எங்கோ அந்தகாரத்தில் ஒளிந்திருந்தான் அந்தப்பாஞ்சனன். ஒருவழியாக பாஞ்சனனைப் பிடித்துக் கேட்டால் அவன் “ என் மேல் விழும்

வெளியே வந்தார்.

பின் எப்படியும் குருவின் மகனைப் பெற்றே தீருவது என்ற எண்ணத்தோடு உயிரோடு இருப்பவர்கள் யாருமே செல்ல இயலாத சம்யமனீ எனப்படும் யமனின் இருப்பிடத்திற்குச் சென்றார்கள் பலராமரும் கிருஷ்ணரும். எவ்வளவு தேடியும் யமனை எங்கும் காணாததால் பாஞ்சனனிடமிருந்து எடுத்த பாஞ்சசன்யம் என்னும் சங்கை உரக்க ஊதினார் கிருஷ்ணர். சம்யமனிக்குள் சங்கொலியா.. உரத்த சங்கொலி கேட்டதும் ஓடிவந்த யமன் கிருஷ்ணரையும் பலராமரையும் உரிய மரியாதையோடு

Koviloor Digital Library

குருவின் மகனைத் திருப்பித் தந்தார். விடாமுயற்சியுடன் சமுத்திரராஜன், சங்காசுரன், யமன் ஆகியோரிடம் சென்று கேட்டுத் தங்கள் குருவின் மகனைப் பெற்று ஆசிரமம் திரும்பி வந்தார்கள் கிருஷ்ணரும் பலராமரும்.

ஆச்சரியத்தில் வாயடைத்துப் போன சாந்தீபனி முனிவரும், அவர் மனைவி சுமுகி தேவியும் தங்கள் அன்பு மகனைக் கட்டிக் கொண்டு கண்ணீர் வடித்தார்கள். தங்கள் பிறவிப் பேறான முக்தியை அடைவதற்குரிய பித்ருக் கடன்களைச் செலுத்தத்

வரவேற்று வணங்கி விவரங்கள் கேட்டறிந்தான்.

தங்கள் குருவின் மகனைத் திரும்பித் தரவேண்டும் என்று அவர்கள் கூறியதை ஏற்ற யமதர்மன் ” இதுவரை இங்கே வந்தவர்கள் யாரும் உயிருடன் திரும்பிச் சென்றதில்லை. ஆனால் இச்சிறுவன் தங்கள் குருவின் மகன் என்பதாலும் திருப்பித் தரும்படிக் கட்டளை இட்டது தாங்கள் என்பதாலும் நான் கட்டுப்படுகிறேன் “ என்று கூறிக்

தங்கள் மகன் வந்தது குறித்து மகிழ்ச்சியுற்றார்கள். வாயார மனதாரக் கிருஷ்ணரையும் பலராமரையும் வாழ்த்தினார்கள். தங்கள் குருவிற்குத் தக்க தட்சணையை அளித்த மகிழ்ச்சியோடு பலராமரும் கிருஷ்ணரும் மதுராத் திரும்பினார்கள்.

Koviloor Digital Library

சிவாலயங்களின் சிறப்புகள் - 18

வே.இராமசாமி, B.Com.F.C.A.,
Chartered Accountant
பலவான்குடி

சிவனேச செல்வர்களுக்குப் பணிவான வணக்கங்கள்.

சிவாலயங்களின் சிறப்புகளை மாதம் ஒரு திருக்கோயில் என எழுத இருக்கிறேன். இந்தத் தகவல்கள் கோயிலின் ஆலய குறிப்புகளில் இருந்தும் கோயில் குருக்கள் சொல்வதை வைத்தும் எழுதி எழுதியுள்ளேன்.

கொடுமுடி

மூலவர் பெயர் : மகுடேஸ்வரர் மலைக்கொழுந்தீஸ்வரர்

அம்மனின் பெயர் : திரிபுரசுந்தரி மதுர பாஷினி சௌந்தரநாயகி வடிவுடையம்மன்

தல விருட்சம் : வன்னி மரம்

தீர்த்தம் : காவிரி , பிரம்ம தீர்த்தம், பரத்வாஜ தீர்த்தம் மற்றும் தேவ தீர்த்தம்

புராண காலப் பெயர் : திருப்பாண்டி கொடிமுடி

கோயில் திறந்திருக்கும் நேரம் காலை 6 மணி முதல் 12 மணி வரை மாலை 4 மணி முதல் இரவு 9 மணி வரை

கோயிலின் சிறப்புகள்:

1.மூர்த்திகளுக்கும் இங்கு சன்னதி உள்ளது. மும்மூர்த்திகளுக்கும் மூன்று கோபுரங்களும் மூன்று வாய்களும் தனித்தனியாக உள்ளது.

2. மூன்று முகம் கொண்ட பிரமன் வன்னி மரத்தின் கீழ் அருள் தருகிறார்.

3.ஆஞ்சநேயர் இங்கு கோரமான பல்லுடன் காட்சி தருகிறார்.

4.விநாயகர் இங்கு புலி காலுடனும் யானை முகத்துடனும் காட்சி தருகிறார்; இவருக்கு வியாக்கிர பாத விநாயகர் என்ற திருப்பெயர் உள்ளது.

5.ஆதிசேஷனால் உருவாக்கப்பட்ட திருக்கோயில் என்பதால் இங்கு நாக வழிபாடு சிறப்பு வாய்ந்தது.

6. இங்கு உள்ள வன்னி மரத்தின்

Koviloor Digital Library

10. மூலவர் வீரநாராயண பெருமாள் சயனித்த கோலத்தில் அருள் தருகிறார்; அவருக்கு எதிர்ப்புறமாக கருடாழ்வார் காட்சி தருகிறார்.

11.திருத்தலத்தில் 63 நாயன்மார்கள், 12 ஆழ்வார்கள், நவக்கிரகங்கள், சூரியன், காவிரி கண்ட கணபதி, சோமாஸ்கந்தர், அகஸ்தீசுவரர், கஜலட்சுமி, மகாவிஷ்ணு, பிரமன், சுப்ரமணியர், துர்க்கை, தட்சிணாமூர்த்தி, சண்டிகேஸ்வரர், நாயன்மார்கள், நடராஜர் மற்றும் அருணகிரிநாதர், வல்லப கணபதி, முருகன், மகாலட்சுமி, சோளீஸ்வரர், விஸ்வநாதர், விசாலாட்சிவிஸ்வேஸ்வரர், சரஸ்வதி, சப்தமாதர், சண்டிகேஸ்வரி பரமபத நாதர், வெங்கடாஜலபதி ராமானுஜர் நாகர் ஆஞ்சநேயர் ஆகியோர் வீற்றிருக்கிறார்கள்

12. வாயு பகவான் மேருமலையை பெயர்க்கும்போது, அதன் ஒரு பகுதி சிதறி, சிவலிங்கமாக கொடுமுடியில் விழுந்ததாக கூறப்படுகிறது.

வயதை கணக்கிட இயலவில்லை. 2000 ஆண்டு முதல் 3000 ஆண்டு வரை இருக்கும் என்று கருதுகிறார்கள்.

7. இந்த வன்னி மரத்தில் பூ பூக்கும் ஆனால் காய் காய்க்காது; இந்தப் பூவில் ஒரு பக்கம் முள் இருக்கும் மற்றொரு பக்கம் முள் இருக்காது.

8. இந்த மரத்தின் இலையை தண்ணீரில் போட்டால் தண்ணீர் எவ்வளவு நாட்கள் ஆனாலும் கெட்டுப் போகாது.

9.மூலவர் சுயம்பு மூர்த்தியாக அருள் தருகிறார்.

Koviloor Digital Library

16. கிழக்கு நோக்கி மூன்று இராஜகோபுர வாயில்கள் கொண்ட ஒரே கோயில் என்ற பெருமை கொண்டது. ஆவணி மாதம் மற்றும் பங்குனி மாதங்களில் சூரிய கதிர்கள் இராஜகோபுரத்தின் துளை வழியாக முறையே மகுடேசுவரர், வீரநாராயணப் பெருமாள், திருமங்கை நாச்சியார், வடிவுடையநாயகி ஆகியோரின் மூலத்திருமேனி மேல் வீழ்ந்து அருள்வது சூரிய பூஜை எனப்படும்.

13. இத்தலத்தின் சனிபகவான் வலதுகரத்தில் சூலமும் இடதுகரத்தில் நாகமும் கொண்டு வாகனத்தில் அமர்ந்த கோலத்தில் மேற்கு நோக்கிய பார்வையாக அமைத்துள்ளார்,

14. மூலவர் மகுடேசுவரர் சுயம்பு லிங்க திருமேனியாக ஆவுடை அமைப்பில்லாமல் சதுஸ்ர பீடம் அமைப்பில் லிங்கத்தின் மேல் அகத்தியருடைய கை வடு அடையாளத்துடன் காட்சி தருகிறார். இதனை அபிஷேக நேரத்தில் காண இயலும்.

15. சில்ப சாத்திரங்களில் சதுர்முக தாண்டவ மூர்த்தி (குஞ்சிதபாதர் முயலகனின்றி) எனப்படும் நடராஜ மூர்த்தியின் மற்றோர் நடனக்கோலம் இருப்பது இங்கு பெருமையானது. இவருக்கு சித்திரா பௌர்ணமியன்று சிறப்பு வழிபாடு நடைபெறும்.

17.விழாக்கள், மகாளய அமாவாசை அன்று முன்னோர்களுக்கு தர்ப்பணம் செய்து வணங்குவது வழக்கமாக இருந்து வருகிறது. பழனிக்கு காவடி எடுப்பவர்கள் இங்கிருக்கும் காவிரி ஆற்றிலிருந்து நீர் கொண்டுவந்து காவடியை எடுக்கத் தொடங்குவது காலங்காலமாக பின்பற்றும் நடைமுறையாக இருந்து வருகிறது. இது தவிர ஐப்பசி பௌர்ணமி, தைப்பூசம், ஆருத்ரா தரிசனம் போன்ற விழாக்கள் கோலாகலமாக கொண்டாடப்படுகிறது. சித்திரை பிரமோற்சவத்தின் 11 நாட்கள் இந்த ஸ்தலத்தில் பெருவிழாவாக சிறப்பித்து பூஜிக்கப்படுகிறது. தேர் திருவிழா, உற்சவர்

Koviloor Digital Library

வீதியுலா போன்றவைகளையும் நிகழ்த்துகின்றனர். தமிழ்நாட்டிலேயே மும்மூர்த்திகளைக் கொண்ட ஒரே கோயில் என்ற பெருமையை பெற்ற இந்த ஆலயம் வந்து வழிபட்டால் மூன்று மடங்கான ஆசிர்வாதங்கள் கிடைக்கும்.

திருஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகியோரால் பாடல் பாடப்பெற்ற தலம் . சுந்தரமூர்த்தி நாயனார் நமச்சிவாய பதிகம் பாடிய திருத்தலம் ஆகும்.

மும்மூர்த்திகளும் ஒரே இடத்தில் எழுந்தருளி உள்ள ஒரே திருத்தலம் கொடுமுடி ஆகும் . திருவண்ணாமலையில் மலையே சிவனாக கருதி வழிபடப்படுகிறது.

மலையின் முடியே இங்கு சிவலிங்கமாகக் காட்சி அளிப்பதால் கொடுமுடி என்று அழைக்கப்படுகிறது. இங்கு எழுந்தருளி உள்ள சிவபெருமானை மகுடேசுவரர் என்று அழைக்கிறார்கள்.

இந்த மலையின் உச்சி முடியை கொடுமுடி என அழைக்கின்றனர். இது திருமணத்தடை நீக்கும் திருத்தலமாகும். சிவபெருமானின் திருமணத்தைக் காண பிரம்மாவும் விஷ்ணுவும் இங்கு வந்ததாக புராணங்கள் கூறுகின்றன; எனவே இங்கு மும்மூர்த்திகளுக்கும் சன்னதி அமைந்துள்ளது.

ராகு, கேது தோஷம் உள்ளவர்கள் இங்கு வந்து வழிபட்டு, தோஷ நிவர்த்தி செய்து கொள்ளலாம்.

புராணத்தில் 5 மணிகள் சிறப்பு வாய்ந்த ஸ்தலங்களாக கருதப்படுகின்றன. அவை

- சிகப்பு மணி : திருவண்ணாமலை
- மரகத மணி : திருஈங்கோய் மலை
- மாணிக்கமணி : திருவாட்போக்கி
- நீலமணி : பொதிய மலை
- வைரமணி : பாண்டிக்கொடிமுடி

கொடுமுடி தலத்திற்கு முன்பு, காவிரி ஆறு பாய்ந்து ஓடுவது மேலும் சிறப்பு. இவ்விடத்திலிருந்து தான் காவிரி ஆறானது கிழக்கு திசையில் திரும்பி பாய்ந்து ஓடுகிறது. இந்த ஸ்தலத்தில் காவிரி ஆறு, பிரம்ம தீர்த்தம், பரத்வாஜ தீர்த்தம் மற்றும் தேவ தீர்த்தம் என்ற நான்கு தீர்த்தங்கள் உள்ளன.

இந்தத் திருத்தலம் கரூரில் இருந்து 28 கிலோ மீட்டர் தொலைவிலும் ஈரோட்டில் இருந்து 40 கிலோமீட்டர் தொலைவிலும் அமைந்துள்ளது

தொலைபேசி எண்கள் 04204 - 222020 மற்றும் 04204 - 222375

Koviloor Digital Library

திவ்ய தேச கவிதை தரிசனம் –35

திருத்தேவனார்த் தொகை

அழ. மணிமேகலை,
காரைக்குடி

108 திவ்ய தேசங்களுள் முப்பத்தி ஐந்தாவது திவ்ய தேசம், திருத்தேவனார்த்தொகை. சோழநாட்டுத் திருப்பதிகளுள் இது முப்பத்தி ஐந்தாவது திவ்யதேசமாகும். இதனைக் கீழ்ச்சாலை என்றும் குறிப்பிடுவர். திருநாங்கூரிலிருந்து சுமார் 1 மைல் தொலைவில் மன்னியாற்றின் தென்கரையில் உள்ளது. திருநாங்கூர் திவ்யதேசங்களில் இதுவும் ஒன்றாகும்.

திருநாங்கூரிலும் திருநாங்கூரைச் சுற்றிலும் அமைந்துள்ள 11 திருநாங்கூர் திருப்பதிகளுள் திருக்காவளம்பாடி, திருஅரிமேயவிண்ணகரம், திருவண்புருடோத்தமம், திருச்செம்பொன்செய் கோயில், திருமணி மாடக்கோவில் மற்றும் திருவைகுந்த விண்ணகரம் ஆகிய ஆறு தலங்கள் குறித்து முன்பதிவில் கண்டுள்ளோம். இத்தலம் திருநாங்கூரில் நாம் காணப்போகும் ஏழாவது தலமாகும்.

திருமால், திருநாங்கூரில் 11 வடிவங்களோடு சிவபெருமான் முன்பாகத் தோன்றி, அவரைச் சாந்தப்படுத்தி, தாண்டவத்தை நிறுத்தி, 11 சிவவடிவங்களையும் ஒன்றுபடுத்தும்போது, தேவர்கள் இந்த இடத்தில் கூட்டம் கூட்டமாய் வந்து சபை கூடி நின்றதால், இத்தலம் தேவனார்த்தொகை ஆயிற்று.

திருநாங்கூருக்கு எழுந்தருளிய 11 எம்பெருமான்களில், இவர் திருவிடவெந்தை எம்பெருமான் ஆவார்.

Koviloor Digital Library

தேவனார்த்தொகை என்று அழைக்கப்பட்டதாகவும் கூறுவர். விஷ்ணுவுக்கும் லக்ஷ்மிக்கும் நடந்த திருமணத்தைக் குறிக்கும் வகையில், இங்குள்ள திருக்குளம் சோபன புஷ்கரணி

என்றும் விமானம் சோபன விமானம் என்றும் பெயர் பெற்றிருக்கின்றன. சோபனம் என்றால் திருமணம் என்று பொருள்

இங்குள்ள,

மூலவர் - தெய்வநாயகன்

தாயார் - கடல்மகள் நாச்சியார்

உற்சவர் - மாதவப்பெருமாள்

உற்சவத் தாயார் - மாதவநாயகி

தீர்த்தம் - சோபன புஷ்கரணி , தேவசபா புஷ்கரணி

விமானம் - சோபன விமானம்

கோலம் - கிழக்கு நோக்கி நின்ற திருக்கோலம்

விஷ்ணு, பாற்கடலில் தோன்றிய இலக்குமியை மணம் முடித்தபின், வசிஷ்டருக்கு இங்கு காட்சி கொடுத்தார். தேவர்களும் பெருமாளை லஷ்மியுடன் தரிசிக்கக் கூட்டமாக வந்ததால், இத்தலம் கொள்ளலாம். தேவர்கள் இங்கு கூடியதைக் குறிக்கும் வகையில், புஷ்கரணிக்கு தேவசபா புஷ்கரணி என்ற பெயரும் விளங்குகிறது.

இத்தலத்துக்கென்று ஒரு தலபுராணம் உள்ளது. “போகி” என்று அழைக்கப்பட்ட இந்திரன், அந்த அடைமொழிக்கேற்ப முற்றிலும் போகத்திலேயே திளைத்திருந்தான். யாருக்குமே கிடைத்திராத ஐராவதம் என்ற வெள்ளை யானையின் மீதேறி கர்வத்துடன் வந்து கொண்டிருந்தான். அப்பொழுது துர்வாச முனிவர் அங்கு வந்தார். அவர் கரத்தில் ஓர் அற்புத அருள்மாலை இருந்தது. அவருடைய ரிஷித் தன்மையைப்

Koviloor Digital Library

பாராட்டும் வகையில், பரமனாலும் திருமகளாலும் வழங்கப்பட்ட அம்மாலை, அனைத்தையும் துறந்துவிட்ட அவருக்கு பெருஞ் சுமையாக இருந்தது. ஆகவே, அதை அரசர் நிலையில் தகுதி கொண்ட ஒரு கோமகனிடம் சேர்ப்பிக்க எண்ணம் கொண்டார். அவர் கண்ணில் முதலில் பட்டவன் இந்திரன். தேவர்களுக்கெல்லாம் அரசனாயிற்றே, இந்த மாலையால் அவர்கள் அனைவருக்கும் அவன் பெறற்கரிய பேறுகளைப் பெற்றுத் தருவான் என்று கருதி, அவனருகே சென்று, அந்த மாலையை ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொண்டார். குனிந்து கைநீட்டி அம்மாலையைப் பெற்றுக் கொள்வது தனது கௌரவத்துக்குக் குறைவு வந்து விடும் என நினைத்த இந்திரன், யானையை அடக்க உபயோகப்படும் அங்குசத்தை நீட்டி, துர்வாசரின் கரங்களில் இருந்த மாலையை ஒரு கொக்கி போட்டு இழுப்பது போல் இழுத்து, ஐராவதத்தின் மத்தகத்தின் மீது போட்டான். அந்த யானையோ, தன் தலைவனுக்குத் தான் சற்றும் சளைத்தவனல்ல என்பது போல, அம்மாலையைத் தனது தும்பிக்கையால் இழுத்து, கீழே போட்டு மிதித்தது. பதறிப் போனார் துர்வாசர்.

அவரின் கண்களில் தீப்பொறி பறந்தது. வார்த்தைகளில் தணல் தெறித்தது. “இந்திரா, இந்த அற்புத மாலையைச் சிதைத்து, அந்தப் பரந்தாமனுக்கே இழுக்கு உண்டாக்கி விட்டாய். இந்தச் செருக்குக்கான காரணம், உன்னுடைய செல்வம். அதெல்லாம் இனி அழிந்து போகட்டும். நீ பதவி இழந்து, அனைவராலும் அவமதிக்கப்படுவாய்” எனச்



சாபமிட்டார். அதே போல இந்திரன் தன் செல்வமெல்லாம் இழந்தான். தவித்துப் போனான் இந்திரன். அசுரர்களின் கை ஓங்கியிருந்தது. ஒரு கட்டத்தில் இனியும் தாங்காது என்ற நிலை வந்தபோது,

Koviloor Digital Library

நேராக தேவகுருவான பிரஹஸ்பதியைச் சரணடைந்தான். அவர் அறிவுரைப்படி, பிரமனை வணங்க, பிரமனின் வழிகாட்டுதலின்படி பாற்கடல் பரந்தாமனை சிரம் தாழ்த்திப் பணிந்தான். இந்திரனின் நிலை கண்டு பெரிதும் வருந்தினார் திருமால். அவனுடைய பழைய அதிகாரத்தை அவனுக்கு அளிக்க, ஐராவதம் முதலான சொத்துகள் அவனுக்கே திரும்பக் கிடைக்க, பாற்கடல் கடையும் பணியை முடுக்கி விட்டார். பாற்கடல் கடையப்பட்டது.

திருமாலின் உள்ளக்கிடக்கையைப் புரிந்துகொண்ட பாற்கடலும், அரிய பெரும் பொருட்களை வாரி வழங்கியது. இதைப் பார்த்து பெரிதும் மகிழ்ந்த இந்திரன், ஓடோடிச் சென்று திருமகள் காலில் விழுந்து தன் தவறை மன்னிக்குமாறு வேண்டினான். உடனே திருமகள், தன் கையிலிருந்து பாரிஜாத மாலையை இந்திரனுக்கு வழங்கினாள். அந்த பாரிஜாத மாலை வந்த வேளை, இந்திரன் இழந்ததையெல்லாம் திரும்பப் பெற்றான். இதே தருணத்தில் அவனுக்கு அற்புதமான காட்சி ஒன்றையும் காட்டி அருளினார் மஹாவிஷ்ணு.

அது, அவர் திருமகளை மணந்த காட்சிதான். இப்படி ஒரு சம்பவம் நிகழப்போவதை அறிந்த எல்லா தேவர்களும், அங்கே ஒருங்கே குழுமி அந்த ஆனந்தக் காட்சியைக் கண்டு களித்தனர். அவ்வாறு தேவர்கள் கூடிய கூட்டத்தாலேயே, இந்தத் தலம்

Koviloor Digital Library

திருத்தேவனார்த்தொகை என்றழைக்கப்பட்டது.

தேவர்களின் கடவுள் என்பதால் பெருமாள் தெய்வநாயகன் ஆனார். பாற்கடலிலிருந்து தோன்றியதால், தாயார் கடல்மகள் நாச்சியார் ஆனார்.

மூலவருக்கு உண்டாகிய தெய்வநாயகன் என்னும் திருநாமம், 108 திவ்யதேச எம்பெருமான்களில் நடுநாட்டுத் திருப்பதியான திருவ யிந்திபுரத்து எம்பெருமானுக்கும், பாண்டிநாட்டுத் திருப்பதியான வானமாமலை எம்பெருமானுக்கும் வழங்கப்பெற்றுள்ளது. எனினும் இத்தலம், உற்சவ மூர்த்தியின் பெயரால் மாதவப்பெருமாள் கோயில் என்றே அழைக்கப்படுகிறது. காலங்கள் மாற மாற, புராதன வழக்கங்களே மரபு ஒழிந்து, புதுமைக் கோலம் பூணும் போது, ஊர்ப் பெயர்கள் மாறுவதும் தவிர்க்க முடியாததாகவே ஆகிவிடுகிறது.

இந்தக் கோயிலில் பலிபீடமும் பெரியதிருவடியும் மட்டும்தான் உள்ளன. கொடிமரம் இல்லை. இந்தக் கோயில் விமானத்தின் நிழல் விமானத்துக்குள்ளேயே விழுவது இக்கோயிலின் சிறப்பு.

"திருத்தேவனார்த்தொகை" குறித்து காப்பியக் கவிஞர் நா.மீனவனார் எழுதிய பாடல்களும், அவற்றின் விளக்கங்களும் பின்வருமாறு.

1. தேவர்கள் புகழ்கின்ற சிறப்புடைய திருத்தேவனார்த் தொகையில் வாழ்கின்ற எம்பெருமானை, முதல் மூன்று தெய்வங்கள் என்று சொல்லக்கூடிய பிரமன், விஷ்ணு, சிவன் ஆகிய மூவருக்குள் தன்னிருப்பைக் கொண்டவனை, முதலையின் வாயிலிருந்து யானையை மீட்ட கோவலனை, ஆயர்குலத்து வேந்தனை, திருமங்கையாழ்வாரின் பாடல்களை மாலையாகக் கொண்ட பரம்பொருளை வணங்குவோமாக.

தேவர்புகழ் சீருடைய திருத்தேவ னார்த்தொகைவாழ்

மூவர்முதல் தன்னிருப்பை
முதலையின்வாய்க் கரிமீட்ட

கோவலனை யதுகுலத்துக்

Koviloor Digital Library

கோவேந்தைத் திருமங்கைப்

பாவலன்சொல் மாலையணி பரம்பொருளை வணங்குமினே.

2. உலகத்தார் போற்றும் இத்தலத்து மூலவர் தெய்வநாயகனை, மழையைத் தருகின்ற முகிலைப் போன்றவனை, மேலிருக்கும் தேவர்கள் உய்வு பெறுவதற்காக மெய்ஞ்ஞானத்தைத் தந்தவனை, காடுகளில் மாடுகளை மேய்த்துக் கொண்டிருந்தவனின் கால்மலர்களைப் பணிவோமாக.

நானிலத்தார் போற்றுமொரு நம்தெய்வ நாயகனை

மானிலத்தார் மதிக்கவரு மழைமுகிலை அமரரெனும்

மேனிலத்தார் உய்திபெற மெய்ஞ் ஞானம் தந்தானைக்

கானிலத்தில் நிரைமேய்த்தான் கால்மலரைப் பணியுமினே.

3. இத்தலத்து நாயகியாம் கடல்மகள் நாச்சியாரைக் கைப்பிடித்த மாதவப் பெருமானை, போர்முனையில் நூறு கவுரவர்களின் ஆற்றலை அழித்தவனை, படமெடுத்து ஆடுகின்ற பாம்பின் மேல் கடலுக்குள் படுத்திருப்பவனை, ஆலமரத்தின் கீழிருக்கும் வ லி மை மி க் க வ னை வணங்குவோமாக.

கடல்மகளாம் நாச்சியினைக் கைப்பிடித்த மாதவனை

அடல்முனையில் நூற்றுவரின் ஆற்றலினை அழித்தானைப்

படமணிகொள் உரகமிசைப் பாலாழி கிடந்தானை

வடவாலின் கீழிருக்கும் வலியானை வணங்குமினே.

4. மகாபாரதத்தில், அபிமன்யுவை வீழ்த்திய அருச்சுனன், அடுத்த நாள் சூரியன் மறைவதற்குள், கௌரவர்களின் தங்கை துச்சலையின் கணவனான ஜயத்திரதனைக் கொல்வதாகவும், அவ்வாறு இயலாவிடில் தீப்புகுவதாகவும் சபதம் செய்கிறான். இதனைப் பயன்படுத்தி, அருச்சுனனைத் தீப்புக வைப்பதற்காக, ஜயத்திரதன் போரில் ஈடுபடாமல் ஒளிந்திருக்கிறான். கதிரவன் மறையும் நேரம் நெருங்கியும், ஜயத்திரதனைக் காணாது பாண்டவர்கள் கலக்கமடைகின்றனர். அப்போது கிருஷ்ணர் தனது சுதர்சன சக்கரத்தால் சூரியனைத் தற்காலிகமாக மறைக்க, ஜயத்திரதன் வெற்றிக்களிப்புடன் வெளிப்படுகிறான். கிருஷ்ணர் சக்கரத்தை இப்போது விலக்கிக் கொள்ள பகல் பொழுது மீள்கிறது. அருச்சுனன் விட்ட அம்பால், ஜயத்திரதன் உயிர் நீத்தான்.

Koviloor Digital Library

இவ்வாறு மகாபாரதத்தில், போரின்போது சூரியனைத் தனது சக்கரத்தால் மறைத்தவனை, மாதவனை, கேசவனை, துன்பங்களைத் தொலைத்து இன்பங்களைத் தந்தவனை, தாமரையில் வாழ்கின்ற திருமகளின் நாயகனை, பாண்டவர்களுக்குத் தூதாகி நடந்தவனைத் தொழுது, அவனுடைய பாதங்களே துணையென்று கொள்வோமாக.

மாதவனைக் கேசவனை வலியைத் தொலைத்தானை

ஆதவனை ஆழியால் அமர்க்களத்தே மறைத்தானை

போதலரும் தாமரைவாழ் பொன்மகளின் நாயகனைத்

தூதாகி நடந்தவன்தாள் துணையென்று தொழுதிடுமின்.

5. காட்டுக்குச் சென்ற பாண்டவர்கள் உதவிகேட்டு நிற்கும்போது, அவர்களுக்கு அருளிய எம்பெருமான், மான் போன்ற விழிகளையுடைய மாதவத்து நாயகியை, தேனைச் சுமந்து நிற்கின்ற தாமரை மலர்கள் சூழ்ந்த திருத்தேவனார்த் தொகையில் மணந்து நிற்கின்றான். அவனை வாழ்த்துவோமாக.

மானேந்து கண்ணாளை மாதவத்து நாயகியை

தேனேந்து கமலஞ்சூழ் திருத்தேவ னார்த்தொகைசேர்

கானேந்து பாண்டவர்கள் கையேந்தி நிற்கையிலே

தானேந்தி அவர்க்கருளைத் தந்தானை வாழ்த்துமினே.

மங்களாசாசனப் பாடல்

வானுலகிலும் பூலோகத்திலும் வாழும் பல வகைப்பட்ட உயிர்களுக்கும் தானே அந்தர்யாமியாய் (எங்கும் நிறைந்திருக்கும் பரமாத்மாவாய்) இருக்கும் எம்பெருமானான, அந்த தலைவன் இருக்குமிடம், அழி வில்லாத பெருஞ்செல்வமுடைய அருமையான வேதங்களை ஓதும் அந்தணர்கள் வாழும், தேன்பாயும் மலர்களையுடைய சோலைகள் சூழ்ந்த திருத்தேவனார்த் தொகையே என்று இத்தலத்தைக் குறித்து திருமங்கையாழ்வார் பாடிய மங்களாசாசனப் பாடல்.

வானாடும் மண்ணாடும் மற்றுள்ள பல்லுயிரும்

தானாய எம்பெருமான் தலைவன்அமர்ந்து உறையுமிடம்

ஆனாத பெருஞ்செல்வத்து அருமறையோநாங்கை தன்னுள்

தேனாரும் மலர்பொழில்சூழ் திருத்தேவனார்த் தொகையே

Koviloor Digital Library

பெரியபுராணக் கதைக் களம்

பகுதி – 18

அன்பர்களே !

தொண்டர்தம் பெருமை அளவிடற்கு அரியது. அவர்களின் அருள் வரலாறு நம்மை நல்வழியில் நடத்தும். திருநெல்லையின் இவ்விதழில் புதுமை இணைப்பாகப் பெரியபுராணத்தில் இடம்பெற்றுள்ள அறுபத்து மூன்று அருந்தொண்டர் கதைகள் ஒவ்வொன்றாகக் காதுகளுக்கும், கண்களுக்கும் மனதிற்கும் இன்பம் சேர்க்கும் வகையில் கதைவடிவில் ஒளிபரப்பாகிறது. கேட்டு, உணர்ந்து அனுபவித்து மகிழுங்கள்.

மேலே காணும் பதிவின் புற வழி இணைப்புக்கு இங்கே சொடுக்கவும்

Koviloor Digital Library

தென் சபாநாயகர் கோயில் தரிசனம்

உ

ஆவணி மாத சதுர்த்தசி திதி மகா அபிடேகம் அருள்மிகு சிவகாம சுந்தரி உடனுறை அருள்மிகு ஆனந்த நடராச மூர்த்திக்கு **6-9-2025** அன்று மிகச்சிறப்பாக நடைபெற்றது. புரட்டாசி மாத மகா அபிடேகம் வரும் **5-10-2025** அன்று நடைபெற இருக்கிறது

புரட்டாசி - ஐப்பசி மாத வழிபாட்டு நிகழ்ச்சிகள்

05.10.2025 மாலை
ஸ்ரீ ஆனந்த நடராஜர் மஹா அபிடேகம்

02.10.25	வளர்பிறை	ஏகாதசி	காலை	பெருமாள் வழிபாடு
04.10.25	பிரதோஷம்			
05.10.25	சதுர்த்தசி		மாலை	ஸ்ரீ ஆனந்த நடராசர் மகா அபிடேகம்
06.10.25	பௌர்ணமி		மாலை	சிவகாமி அம்மன் வழிபாடு
10.10.25	சங்கடஹர	சதுர்த்தி	மாலை	விநாயகர் வழிபாடு
10.10.25	கார்த்திகை		மாலை	ஸ்ரீ ஆறுமுகர் வழிபாடு
13.10.25	தேய்பிறை	அஷ்டமி	மாலை	வைரவர் வழிபாடு
18.10.25	பிரதோஷம்			
29.10.25	வளர்பிறை	அஷ்டமி	மாலை	வைரவர் வழிபாடு

Koviloor Digital Library

ஒலிப்பேழை

கம்ப வாரிதியின் பக்கம்

திருநெல்லை இதழில் மாதந்தோறும் கம்பவாரிதி இலங்கை திரு ஜெயராஜ் அவர்களிடம் வினாக்களை எழுப்பி அவ்வினாக்களுக்கு விடையை அவர்களின் குரல் வழியாகப் பெற்று திருநெல்லையில் பதிவிடுகிறோம்.

கேள்வி:1

1. நாம் பிள்ளையார் சுழி என்று உனாவை எழுதிவிட்டு நாம் எதையும் செய்ய தொடங்குகிறோமே, பிள்ளையார் சுழிக்கும் உனாவிற்கும் என்ன தொடர்பு என்பதை விளக்கு கூறுமாறு வேண்டுகிறோம்?

பதில்:1

கேள்வி:2

2.ராமனுக்கு பட்டாபிஷாகம் செய்ய வேண்டும் என்று முடிவு செய்தவுடன் தசரத சக்ரவர்த்தி , முதலாவதாக உயர்மந்திரிமார்கள் குலகுருவான வஷிஸ்டர் கியோர் அடங்கிய சபையிடமும் , இரண்டாவதாக சிற்றரர்சர்களை கூடிய சபையிடமும், பட்டாபிஷேகம் குறித்த அலோசனை செய்து அவர்களது கருத்துக்களை கேட்கிறார். ஆனால் கைகேயி கேட்ட வரத்திற்கு சம்மதித்தி பரதனுக்கு பட்டாபிஷேகம் செய்ய வாக்கு கொடுக்கையில், ஏன் எந்த சபைகளையும் கூட்டி ஆலோசனை செய்யவில்லை? இது முரண் இல்லையா? இது குறித்து விளக்குமாறு வேண்டுகிறோம்!

பதில்:2

கேள்வி:3

3.திருவாசகத்தில் அச்சோ பதிகத்தில் வேறு யாருக்கும் கிடைக்காதது தனக்கு கிடைத்ததே என, வியப்பாக மணிவாசகர் சொல்லுகிறார். ஞான நிலையில் உள்ளவரான மணிவாசகர், பிறருக்கு கிடைக்காதது தனக்கு கிடைத்ததாக எண்ணி மகிழ்வதாக இருப்பது சரியாகுமா?

பதில்:3

Koviloor Digital Library

பயிற்சிப் பேழை

ஞானசம்பந்தர் தேவாரம்

மேலே காணும் பதிவின் புற வழி இணைப்புக்கு இங்கே சொடுக்கவும்

திருநாவுக்கரசர் தேவாரம்

மேலே காணும் பதிவின் புற வழி இணைப்புக்கு இங்கே சொடுக்கவும்

சுந்தரர் தேவாரம்

மேலே காணும் பதிவின் புற வழி இணைப்புக்கு இங்கே சொடுக்கவும்

திருப்புகழ்

மேலே காணும் பதிவின் புற வழி இணைப்புக்கு இங்கே சொடுக்கவும்

கோவிலூர் ஆண்டவர் நூலகம்

கோவிலூரில் அமைக்கப்பெற்றுள்ள ”கோவிலூர் ஆண்டவர் நூலகத்தில்” சுமார் 44,000 க்கும் மேற்பட்ட நூல்கள் உள்ளன. நூல் விவர அட்டவணையைப் பதிவிறக்கம் செய்ய இங்கு சொடுக்கவும்.

கோவிலூர் ஆண்டவர் இணைய நூலகம்



கோவிலூர் ஆண்டவர் நூலகத்தில் உள்ள நூல்கள் அனைத்தையும் கோவிலூர் ஆண்டவர் நூலகம் என்ற இணையதள நூலகத்தில் பதிவேற்றம் செய்து தமிழ்க் கொடையாக அளிக்க முடிவு செய்துள்ளோம்.

Koviloor Digital Library

தற்போது சுமார் 8,028அரிய நூல்கள் இணைய நூலகத்தில் உள்ளன.

இப்போது நாள் ஒன்றுக்கு சுமார் 3000 பக்கங்களைப் புதிதாக இந்த நூலகத்தில் சேர்த்துக் கொண்டிருக்கிறோம். இந்த நூலகத்தில் உள்ள நூல்களை விலை இல்லாமல் படிக்கலாம்/ பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

இந்த நூலகத்தில் உள்ள நூல்களை விலை இல்லாமல் படிக்க / பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

கோவிலூர் ஆண்டவர் நூலகத்தில் உள்ள (பட்டியலில் காட்டப்பெற்றுள்ள) எந்த நூலாவது உங்களுக்குத் தேவை என்றால் நூலகப் பொறுப்பாளர் திருமதி.சோமசுந்தரி அவர்களைத் (தொலைபேசி எண் 9488124941 என்பதில்) தொடர்பு கொள்ளவும். அந்த நூல் பதிப்புரிமைக்கு அப்பால் இருக்கும் நிலையில் அதை நம் இணைய நூலகத்தில் சேர்த்திட ஆவன செய்கிறோம். தாங்களும் அந்த நூலை உங்கள் வீட்டில் இருந்து இணையவழியாகப் படிக்கலாம். நூல் இணையத்தில் சேர்த்தபின் உங்களுக்குத் தகவல் தெரிவிக்கப்படும். நீங்கள் அந்த நூலை இணைய நூலகத்தில் படித்துக் கொள்ளலாம் அல்லது பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். இதற்கு எந்தக் கட்டணமும் இல்லை

இணைய நூலகத்தைப் பயன்படுத்துவோம். இறை தத்துவங்களை அறிவோம்.

இப்போது சில இணையக்கோளாறு காரணமாக அடிக்கடி நமது மின் நூலகம் இணைப்பு தடைப்பட்டு வருகிறது.

அவ்வாறு தடைப்பட்டு வரும் சூழலில் அதற்கு மாற்றாக தார் பிரவுசர் என்ற பிரவுசரை கொண்டு நமது நூலகத்தை நீங்கள் தொடர்பு கொள்ள முடியும். அதற்குரிய லிங்க் இத்துடன் இணைத்து இருக்கிறோம்

https://www.torproject.org/download/

Koviloor Digital Library

முந்தைய இதழ்களை படிக்க அந்தந்த லிங்கை கிளிக் செய்யவும்

மலர் 1

திருநெல்லை – ஆவணி 2023

திருநெல்லை – புரட்டாசி 2023

திருநெல்லை – ஐப்பசி 2023

திருநெல்லை – கார்த்திகை 2023

திருநெல்லை – மார்கழி 2024

திருநெல்லை – தை 2024

திருநெல்லை – மாசி 2024

திருநெல்லை – பங்குனி 2024

திருநெல்லை – சித்திரை 2024

திருநெல்லை – வைகாசி 2024

திருநெல்லை – ஆனி 2024

திருநெல்லை – ஆடி 2024

மலர் 2

திருநெல்லை – ஆவணி 2024

திருநெல்லை – புரட்டாசி 2024

திருநெல்லை – ஐப்பசி 2024

திருநெல்லை– கார்த்திகை 2024

திருநெல்லை– மார்கழி 2025

திருநெல்லை– தை 2025

திருநெல்லை– மாசி 2025

திருநெல்லை– பங்குனி 2025

திருநெல்லை– சித்திரை 2025

திருநெல்லை– வைகாசி 2025

திருநெல்லை– ஆனி 2025

திருநெல்லை– ஆடி 2025